Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10.00

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

C/604 Job! With High Salary
Follow
Cima_UK, BIT
(O/L,A/L not necessary)
MCS 324,Palaly Road,Parameswara Junction www.mcsitcampus.org
SMS your name & course to 772 395 895 & Get Schol.



முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 04 ஞாயிற்றுக்கிழமை (17.04.2011) பக்கங்கள் 12 ஓசை – 200

# நிபுணர் குழுவின் அறிக்கை பகிரங்கப்படுத்த வேண்டும்

## வலியுறுத்துகிறார் எரிக் சொல்ஹெய்ம்



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழுவின் அறிக்கை நிச்சயம் பகிரங் கப்படுத்தப்பட வேண்டுமெனவும், இறுதிக் கட்டப் போரில் தமது உற்ற உறவுகளை இழந்தவர்களுக்கும் நடந்தவற்றுக்கான பதிலைத் தேடுவோருக்கும் அது அவசியமானது என நோர்வேயின் அனைத்துலக அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் வலியுறுத்தியுள்ளார்

இலங்கையில் இடம்பெற்றிருக்கக் கூடிய போர் மீறல்கள் தொடர்பான அறிக்கை ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்கள் குழுவால் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆனால், அந்த அறிக்கை இன்னமும் பகிரங்கப்படுத்தப்படவில்லை. அதனைப் பகிரங்கப்படுத்த வேண்டுமென நோர்வேயின் அனைத்துலக அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் நோர்வேயின் Aftenposten நாளிதழுக்குத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக Aftenposten நாளிதழில் வெளிவந்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மே 2009இல் புலிகள் அழிக்கப்பட்டதுடன் 26 ஆண்டுகள் நீடித்த இலங்கையின் உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்தது. போர் மீறல்கள் மேற்கொள்ளப்பட்டதான குற்றச்சாட்டு, போர் முடிவுக்கு வந்த காலப் (11ஆம் பக்கம் பார்க்க)

# அரசியல் உரிமையை வென்றெடுக்க

# பலமுனைப் பேச்சுக்கள் அவசியம்

## கூட்டமைப்பு மீது தமிழ்க் கட்சிகள் சீற்றம்

(கொழும்பு)

**தமிழர்களின் அரசியல் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கான பேச்சு வார்த்தைகளை அரசு கூட்டமைப்புடன் மட்டும்தான் நடாத்த வேண்டும் என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கை தொடர்பாக தமிழ் அரசியல் கட்சிகளிடையே கடுமையான எதிர்ப்பலைகள் கிளம்பியுள்ளன. இவற்றைவிடக் கொழும்பு இராஜதந்திரிகள் மட்டத்திலும் மேற்படி கோரிக்கை பெரும் வாதப்பிரதி வாதங்களைத் தோற்றுவித்துள்ளது.**

யுத்தத்துக்கப் பின்னரான அபிவிருத்தி நோக்கிய புதிய திசையில் தமிழ்மக்களின் அரசியல் பயணம் காலடி வைத்து வீறுடன் தொடரும் இக்காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னமும் யுத்தகால அரசியல் சித்தாந்தத்தில் இருந்து விடுபட முடியாமல் யதார்த்த துக்கு சற்று ஒவ்வாத கோரிக்கைகளை அரசிடம் முன் வைத்திருப்பதாக கொழும்பு தமிழ் அரசியல் கட்சிகள் பல தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ளன.

புலிகளுடன் அரசு சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட்ட பல சந்தர்ப்பங்களில் இதேபோன்ற கருத்துக்களையே புலிகள் தரப்பும் முன் வைத்திருந்தது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## குற்றச் செயல்கள் அதிகம்

## சிறைச்சாலை நிரம்பி வழிகிறது

### தொற்று நோய்களும் தாராளம்



(யாழ்ப்பாணம்)

யாழ். சிறைச்சாலையில் கைதிகளுக்கு தொற்றுநோய் பரவி வருவதாக யாழ். சிறைக்கைதிகள் தெரிவித்துள்ளனர். சிறைச்சாலையில் அதிகளவான கைதிகள் தங்கவைக் கப்பட்டுள்ளதினால் இடநெருக்கடி ஏறபட்டுள்ளதுடன், இதனால் கைதிகளுக்கு தொற்றுநோய் பரவி வருவதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

யாழ் சிறைச்சாலையில் ஒரு அறையில் 200 வரையான கைதிகள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இதனால் தொற்றுநோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக காணப்படுகின்றது.

பெருமளவான கைதிகளுக்கு (12ஆம் பக்கம் பார்க்க)

## இராஜதந்திரிகளுடன் அரசு மந்திராலோசனை

(கொழும்பு)

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் அறிக்கை குறித்து இலங்கை அரசாங்கம் இராஜதந்திரிகளுடன் கலந்துரையாடவுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் எதிர்வரும் 18 ஆம் திகதி பங்களாதேஷ் செல்லும் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் நாடு திரும்பியதும் எதிர்வரும் 21ஆம் திகதி கொழும்பிலுள்ள இராஜதந்திரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

இக் கலந்துரையாடலின் போது ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்கள் குழு அறிக்கை குறித்து விரிவாக கலந்துரையாடப்படவுள்ளதாக இலங்கையின் (11ஆம் பக்கம் பார்க்க)

# ஏட்டிக்குப் போட்டியான மனித உரிமை மீறல்கள்

## அரசு மீதும், புலிகள் மீதும் குற்றச்சாட்டுக்கள்

அரசாங்கப் படையினரும் , புலிகளும் சர்வதேச மனித உரிமை சட்டங்களை மீறிச் செயற்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகளின் நிபுணர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூனினால் இலங்கையின் இறுதிக் கட்ட யுத்தம் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கையின் சராம்சம் சில ஊடகங்களில் வெளியிடப்பட்டுள்ளது.


மனித உரிமை மற்றும் யுத்தக் குற்றச் செயல்கள் இடம்பெற்றுள்ளதாக நிபுணர் குழு அறிவித்துள்ளது. 2008ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முதல 2009ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அதிகளவு குற்றச் செயல்கள் இடம்பெற்றுள் (12ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.நா.வுக்கு பதிலளிக்க தயாராகிறது அரசு

(கொழும்பு)

ஐ.நா. சபையின் நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பான விவகாரங்களை உயர் தரத்திலான இராஜதந்திர அணுகுமுறை ஒன்றின் ஊடாக கையாள்வதற்கு அரசு முயற்சி எடுத்து வருகிறது.

மேற்படி அறிக்கை தொடர்பான பொறுப்புக்கூறும் கடப்பாடு அரசுக்கு இருப்பதனாலும் இந்த அறிக்கையின் காத்திரத்தன்மையைக் கருத்தில் கொண்டும் அரசு மேற்படி முடிவுக்கு வந்துள்ளது. இதனால் இந்த அறிக்கை தொடர்பாக எழுந்தமானமாக கருத்துக் கூறும் முயற்சிகளை அரசு சாதுரியமாகத் தவிர்த்து வருகின்றது. இதன் முதற்கட்டமாக, இலங்கையின்



போர்க்குற்றங்கள் தொடர்பாக ஐ.நா.நிபுணர் குழுவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கைக்குப் பதிலளிக்கத் தகுதிவாய்ந்த நால்வரடங்கிய குழுவொன்றை அரசாங்கம் நியமித்துள்ளது.

அதே நேரம் இலங்கை அரசாங்கம் சார்பில் குறித்த அறிக்கைக்கு எதிராக உத்தியோகபூர்வமான கருத்துக்கள் எதனையும் வெளியிடுவதில்லை என்றும் அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் திஸ்ஸ வித்தாரண அறிவித்துள்ளார்.

எதிர்வரும் நாட்களில் அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டுள்ள நால்வர் குழுவானது நிபுணர் குழுவின் அறிக்கையை கவனமாக ஆராய்ந்து அதற்கான பதிலைத் (11ஆம் பக்கம் பார்க்க)

# களை கட்டுகிறது கசூரினா கடற்கரை எல்லை மீறாமல் தடுப்பது யார்?

(யாழ்.நிருபர்)

காரைநகர் கசூரினா சுற்றுலா மையத்துக்குக் கடந்த சில நாள்களாக உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது.

தமிழ்-சிங்களப் புத்தாண்டு விடுமுறை மற்றும் பாடசாலைகள் முதலாம் தவணை விடுமுறைக்காக மூடப்பட்டுள்ளமை போன்ற காரணங்களால் தென்னிலங்கையில் இருந்து வட பகுதிக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இவர்களில் பெரும்பாலானோர் கசூரினா கடற்கரைக்கும் வருகை தந்திருக்கின்றனர். இங்கு வருகை தரும் அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான உணவு விடுதிகளோ, மலசலகூட மற்றும் கழிப்பறை வசதிகளோ போதுமானதாக இல்லையென சுற்றுலாப் பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர். (10)

# காரைநகர் மேற்கு வீதி புனரமைப்பு எப்போது?

(யாழ்.நிருபர்)

காரைநகர் மேற்கு சுற்றுவீதி மிகமோசமாகச் சேதமடைந்து குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது. இவ்வீதியால் பயணிக்கும் வாகனங்கள் அடிக்கடி பழுதடைவதுடன் துவிச்சக்கர வண்டியில்கூட பயணம் செய்யமுடியாத நிலை காணப்படுகின்றது.

கருங்காலி, பலகாடு, இராசாவின் தோட்டம், தோப்புக்காடு போன்ற பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட போதிலும் வீதிகள் திருத்தியமைக்கப்படாதமையினால் மீளக் குடியேறிய மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (10)

# வாழ்வாதாரம் மேம்படுத்த புதிய உதவித் திட்டம்

(முரசுமோட்டை)

கிளிநொச்சி ஊரியான் பிரதேசத்தில் மீளக்குடியேறிய குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் டனீஸ் அகதிகள் நிறுவனத்தினால் பல்வேறு உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் மேற்படி கிராமத்தில் மீளக்குடியேறிய குடும்பங்கள் குறித்த நிறுவனத்தினால் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு நெற்செய்கை, தோட்டச்செய்கை, கோழி வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு, தையல், வியாபாரம், கடற்தொழில் போன்ற தொழிகளை அடிப்படையாகக்கொண்டு பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு முதற்கட்டமாகத் தோட்டச்செய்கையில் ஈடுபட்டுவரும் 38 பயனாளிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரம், தெளிகருவிகள், விவசாய உபகணரங்கள், விதை தானியங்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

இதைவிட நெற்செய்கையில் ஈடுபட்டுவரும் 33 விவசாயிகளுக்குத் தெளிகருவிகளும், நெற்செய்கைக்குத் தேவையான உபகணரங்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

கோழி வளர்ப்பு, தையல் பயிற்சி போன்ற தொழில்களைத் தெரிவுசெய்த பயனாளிகளுக்கும் பல்வேறு உதவித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை ஏனைய தொழிலகளைத் தெரிவுசெய்த பயனாளிக்கான உதவிகளை வழங்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (110)

# கோவளம் வெளிச்ச வீடு ஒளி கொடுப்பது எப்போது?

(யாழ்.நிருபர்)

கோவளம் வெளிச்சவீடு கடந்த பல வருடங்களாகப் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகிறது.

படகோட்டிகளுக்கும், மீனவாகளுக்கும் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்த இவ்வெளிச்ச வீடு இருள் மண்டிக் காணப்படுகிறது.

கசூரினா சுற்றுலா மையத்துக்கு வரும் உல்லாசப் பயணிகள் கோவளம் வெளிச்ச வட்டைத் தொல்லியல் பொருளைப பார்வையிடுவதைப் போன்று பார்த்துச் செல்கின்றனர்.

இவ்வெளிச்ச வீட்டைப் புனரமைப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (10)

# கரப்பந்தாட்டம்

(யாழ்.நிருபர்)

தென்மராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் இன்றும், நாளையும் நடைபெறவுள்ளது.

இதில் ஆண்களுக்கான போட்டி இன்று மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்திலும், பெண்களுக்கான போட்டிகள் நாளை அதே கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளதாக தெனமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (11)

# விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் கமநல சேவைகள் நிலையத்தின் கீழ் இயங்கும் விவசாய சம்மேளனங்களுக்கான கூட்டம் நாளை காலை 10 மணிக்கு நடைபெறும்.

இடிகுண்டு வீதியில் உள்ள கமநலசேவைகள் நிலையத்தில் பெரும்பாக உத்தியோகத்தர் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் சம்பந்தப்பட்டவர்கள் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (கா)

# உஷ்ணமான காலநிலை

(கொழும்பு)

நாட்டில் நிலவுகின்ற உஷ்ணமான காலநிலை மே மாதம் வரை நீடிக்கும் என வளிமண்டளவியல் திணைக்களம் கூறியுள்ளது.

இலங்கைக்கு நேராக உச்சம் கொடுத்து வந்த சூரியன் நகர்ந்துள்ள போதிலும் சூரிய வெப்பத்தின் தாக்கம் தொடர்ந்தும் நீடிப்பதே இதற்குக் காரணமாகும் என்று திணைக்களத்தின் விசேட வானிலை நிபுணர் சமிந்த டி சில்வா குறிப்பிடுகின்றார்.

இந்த மாதம் 5 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதியான நேற்றைய தினம் வரை சூரியன் இலங்கைக்கு நேராக உச்சம் கொடுத்து வந்ததாக விசேட வானிலை நிபணர் தெரிவித்தார்.

# மரண அறிவித்தல்



## வேலுப்பிள்ளை வேதநாயகம்

**(வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்)**

வடமராட்சி, அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், இல.98, கச்சேரி நல்லூர் வீதியை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை வேதநாயகம் 14.04.2011 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-சிவகாமி தம்பதிகளின் இளைய புதல்வனும், காலஞ்சென்றவர்களான நாகமணி-பவளம் தம்பதிகளின் மூத்த மருமகனும், பரிமளகாந்தியின் அன்புக் கணவரும், தபேந்திரன் (சமூக சேவைகள் உத்தியோகத்தர், பிரதேச செயலகம், கோப்பாய்), இளங்கோவன் (சுவீடன்), திருமாறன் (சுவீடன்), வசந்தன் (சுவீடன்), காயத்திரி (சுவீடன்), அர்ச்சனா (A/L 2009 கலைப்பிரிவு மாணவி, யா/திருக்குடும்ப கன்னியர்மட தேசிய பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், த.சற்குணேஸ்வரி (ஆசிரியை, யா/கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்), இ.சுஜீவா (சுவீடன்), தி.சுபாஜினி (சுவீடன்) ஆகியோரின் அருமை மாமனாரும், த.இலக்கியன், த.இந்துயன், இ.ஆரங்கன் (சுவீடன்), இ.அபினாஷ் (சுவீடன்) ஆகியோரின் நேசமிகு பேரனும், காலஞ்சென்ற வே.கோவிந்தசாமி மற்றும் வே.பாலசண்முகம், காலஞ்சென்ற வே.மகேசன் (J.P, ஓய்வுபெற்ற அதிபர்) ஆகியோரின் பிரியமிகு இளைய சகோதரரும், நா.தணிகாசலம், இ.கனகமலர், நா.அமிர்தநாயகம் (பிரான்ஸ்), நா.இராசநாயகம் (கணக்காளர், மாகாணத் திறைசேரி, வடமாகாணம்), நா.தர்மநாயகம் (இலண்டன்), வி.யோகராணி (ஆசிரியை, யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்), நா.டெய்சிராணி (ஆசிரியை, யா/திருக்குடும்ப கன்னியர்மட தேசிய பாடசாலை), காலஞ்சென்ற நா.நவநாயகம் மற்றும் நா.பிரபாகரன் (உரிமையாளர், நாகமணி ஸ்ரோர்ஸ்) ஆகியோரின் ஆசை மைத்துனரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் 18.04.2011 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்றுப், பூதவுடல் கொழும்புத்துறை, துண்டி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

**இல.98, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி: 021 222 8016**

(028)

கற்காமல் இருப்பதைவிட பிறக்காமல் இருப்பது நல்லது. ஏனெனில் அறியாமைதான் துர்ப்பாக்கியத்தின் மூலவேர். கல்வி கற்றுத்தருவோர் ஒளி விளக்குகள் வைத்திருப்போர். மற்றவர்களுக்கு அவற்றை வழங்கிச் செல்வார்கள். -பிளேட்டோ-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## வறுமையை ஒழிப்போம்!

உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பினால் உலகில் மில்லியன் கணக்கான மக்கள் வறுமையின் கோரப் பிடிக்குள் தள்ளப்படக்கூடிய வாய்ப்புகள் உள்ளதென உலக வங்கியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்புக்கு எந்தவொரு நாட்டினது அரசாங்கத்தையும் குற்றம் சாட்டுவதில் அர்த்தமில்லை. விலை உயர்வு என்று கூறும்போது மக்களைப் பாதிப்படையச் செய்ய வேண்டும் என்ற நோக்கில் அரசுகள் செயற்படுவதில்லை.

அண்மையில் மத்திய கிழக்கு நாடுகளிலும், வட ஆபிரிக்க நாடுகளிலும் நிலவி வரும் அமைதியற்ற சூழலும், கருக்கொண்டுள்ள யுத்த மேகங்களுமே விலை உயர்வுக்குரிய அடிப்படைக் காரணம் என்று உலக வங்கி தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

எண்ணெய் வளத்தையே தனது மூலதனமாகக் கொண்டுள்ள மத்திய கிழக்கு நாடுகளினதும், வட ஆபிரிக்க நாடுகளினதும் மூலப் பொருளாதார வளங்களைச் சூறையாடும் நோக்குடன் அந்நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில், முதலாளித்துவ, ஏகாதிபத்தியவாதிகளின் ஊடுருவல்களே வளர்முக நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்கு குந்தகமாக அமைந்துள்ளதாக அந்நாடுகள் குற்றம் சாட்டுகின்றன.

எண்ணெய் வள நாடுகள் மீதான தாக்குதல்கள் அந்நாடுகளின் இறைமைக்குச் சவால் விடும் அளவிற்கு பரிணமித்து இருப்பதால், அந்நாடுகளின் எரிபொருள் வர்த்தகத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

இந்நிலையில் உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்புக்கு எவரையும் நாம் குறைகூற முடியாது. உணவு உற்பத்தி, பொருள் உற்பத்தி என்பவற்றில் ஒரு நாடு தன்னிறைவு காணுமாக இருந்தால் அந்நாட்டின் பொருட்களின் உயர்வுக்கும், வறுமைக்கும் முற்றுப்புள்ளி வைப்பதாக இருக்கும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் அண்மைக் காலமாக இயற்கை அழிவுகள் பலவற்றிக்கு முகம்கொடுத்து அவற்றின் பாதிப்புக்கு உள்ளாகி வந்துள்ளது. வடக்கையும், கிழக்கையும் உலுப்பிய இயற்கை அனர்த்தம் சொல்லொண்ணாப் பாதிப்புகளை மக்களுக்கு ஏற்படுத்தியதுடன், உயிரிழப்புகளையும் ஏற்படுத்தியிருந்தன.

வெள்ளப் பாதிப்பு நெல் வயல்களை மட்டுமன்றி மரக்கறிப் பயிர்ச் செய்கையையும் பெருமளவில் பாதிப்படையச் செய்திருந்தது. இதனால் உணவுப் பொருட்களுக்குத் தட்டுபாடும், விலை உணர்வுகளும் ஏற்படுமென அரசாங்கம் வெளிப்படையாகத் தெரிவித்திருந்தது.

இந்நிலையில் உள்ளூர் மூல வளங்களைப் பயன்படுத்தி உணவுத் தேவைகளைப் பூரணமாகப் பூர்த்தி செய்து கொள்வதுடன், உற்பத்திகளிலும் தன் நிறைவு கண்டு, வெளிநாட்டு இறக்குமதிப் பொருட்களில் தங்கியிருக்காத நிலைமையொன்றை நாம் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

யுத்தப் பாதிப்புக்கு ஆளான மக்களின் அடிப்படை வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கபட்டு, அவர்களைச் சொந்தக் கால்களில் நிற்க வைக்கக்கூடிய திட்டங்கள் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டைப் பொறுத்தவரையில் குடாநாட்டு மக்கள் கோதுமை மாவின் பாவனையில் இருந்து விடுபட்டு, எமது முன்னோர்கள் உணவுத் தேவைக்காகப் பாவித்த தினை, குரக்கன், வரகு, சாமை, இறுங்கு மற்றும் பனையில் இருந்து பெறக்கூடிய அத்தனை உணவுப் பொருட்களையும் அன்றாடம் உணவுத் தேவைகளுக்குப் பாவனைக்கு எடுத்துக்கொள்ளக் கூடிய நிலைக்கு நாம் தயாராகிக் கொள்ள வேண்டும்.

இதனை நாம் கைக்கொள்வோமாக இருந்தால் எத்தகைய விலை உயர்வுகளும், எம்மைப் பாதிக்க முடியாது என்பதை நாம் புரிந்துகொள்ளலாம்.

-ஆசிரியர்-

# கிடைக்கும் சந்தர்ப்பங்களைத் தவறவிடாது சரிவரப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்



(காரைநகர்)

எமக்குக் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களைத் தவறவிடாது அவற்றைச் சரிவரப் பயன்படுத்திக் கொள்ள அரசியல் தலைமைகள் முன்வர வேண்டும் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

காரைநகர் விளானை சனசமூக நிலையத்தின் வருடாந்த விழாவுக்கும் முன்பள்ளிப் பாடசாலையின் விளையாட்டுப் போட்டிக்கும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்-

முன்னர் எமக்குக் கிடைத்த பல அரிய சந்தர்ப்பங்களை தவறான தலைமைகளினால் தவறவிடப்பட்டதையும் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை நாம் சரிவரப் பயன்படுத்தத் தவறியதாலேயே எமக்கு அழிவுநிலை ஏற்பட்டது.

இந்த அழிவு நிலை தொடர்ந்தும் ஏறபடாதிருக்க கிடைக்கும் சந்தர்ப்பங்களை நாம் சரிவரப் பயன்படுத்த வேண்டும் என்று கூறினார்.

இந்நிகழ்வின்போது 'சமுதாய மேம்பாட்டுக்குச் சிறந்தது கிராமப்புறச் சூழலா? நகர்ப்புறச சூழலா?' எனும் தலைப்பில் நடைபெற்ற பட்டிமன்றத்தில் கலந்து கொண்டவர்களுக்கு அமைச்சர் பணப் பரிசில்களையும் வழங்கிக் கௌரவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வுகளில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் காரைநகர் அமைப்பாளர் ரஜனி, கோப்பாய் பிரதேச அமைப்பாளர் ஐங்கரன, வலிகாமம் பிரதேச அமைபபாளர் ஜீவன், வட்டுக்கோட்டைப் பிரதேச அமைப்பாளர், யாழ்.மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## போட்டி முடிவுகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயமட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற வலைப் பந்தாட்டப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது.

இப்போட்டியில் 15 வயதுப்பிரிவில் சம்பியன் கிண்ணத்தை சாவகச்சேரி இந்துக் கல்லூரியும், 2ஆம் இடத்தை கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயமும், 3ஆம் இடத்தை வரணி மகா வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.

17 வயதுப் பிரிவில் சம்பியன் கிண்ணத்தை கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயமும்,2ஆம் இடத்தை சாவகச்சேரி இந்துக் கல்லூரியும், 3ஆம் இடத்தை சாவகச்சேரி மகளிர் கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

19 வயதுப் பிரிவில் சம்பியன் கிண்ணத்தை கொடிகாமம் திருநாவுக்கரவு வித்தியாலயமும், 2ஆம் இடத்தை மீசாலை வீரசிங்கம் மகா வத்தியாலயமும், 3ஆம் இடத்தை சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணியும் வெற்றி பெற்றுக்கொண்டன. (11)

# நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் 22 இல் வவுனியா விஜயம்

(வவுனியா)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் பெரிய வெள்ளி தினமான எதிர்வரும் 22ஆம் திகதி பிற்பகல் வவுனியாவுக்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த மாதம் 15ஆம் திகதி சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பேராளர் மாநாடு வவுனியாவில் நடைபெறவுள்ளது. அது தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொள்ளவும், வன்னி மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களுடன் கலந்துரையாடலை நடத்தவுமே அமைச்சரின் இந்த விஜயம் இடம் பெறுவதாக முஸ்லிம் காங்கிரஸின் வவுனியா நகரசபை உறுப்பினர் எம்.முனாவ்பர் தெரிவித்தார்.

பேராளர் மாநாட்டில் நாட்டின் பல பாகங்களையும் சேர்ந்த சுமார் 1500 பேர் பங்குபற்றவுள்ளனர்.

அதேநேரத்தில் இதே தினம் காலை செட்டிக்குளம் பிரதேச சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட கட்சி உறுப்பினர்கள் இருவருக்கு பிரதேச மக்களினால் ஆண்டியா புளியங்குளத்தில் அளிக்கப்படவுள்ள வரவேற்பு வைபவத்திலும் அமைச்சர் கலந்துகொள்ளவுள்ளதாக நகர சபை உறுப்பினர் மேலும் தெரிவித்தார்.

# வன்னி மாவட்ட விவசாயிகளுக்கு மத்திய வங்கியின் இலகுகடன் திட்டம்

(முரசுமோட்டை)

கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் மீளக்குடியேறிய விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு இலங்கை மத்திய வங்கி ஏனைய வங்கிகளூடாக விசேட இலகு கடன் திட்டங்களை அறிமுகம் செய்துள்ளது.

கடந்த கால இடப்பெயர்வின் போது கூடுதலான விவசாயிகள் தமது முதலீடுகளையும் காணிக்குரிய சட்ட ஆவணங்களையும் இழந்துள்ள நிலையில், இவ்விவசாயிகள் வங்கிக் கடன்களை பெறுவதில் இதுவரை காலமும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இதனைக் கருத்தில் கொண்டு இலங்கை மத்திய வங்கி கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் இலகு கடன் திட்டங்களை வழங்க முன்வந்துள்ளது.

மேற்படி மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் தங்களது காணியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் எதனையும் தற்போது கொண்டிருக்காத நிலையில், விவசாயிகள் வங்கிக் கடன்களைப் பெறமுடியாத நிலை காணப்பட்டது.

இதனை அடுத்து, விவசாயிகள் காணிகளை அடமானமாக வைத்து விவசாயக் கடன்களைப் பெறுவதற்கு வங்கி உத்தரவாதம் வழங்க முன்வந்துள்ளது.

இதனடிப்படையில் எந்தவொரு வங்கியிலும் விவசாயிகள் காணிகளை உறுதிப்படுத்தும் சத்தியக் கடதாசியை சமர்ப்பித்து தற்போது வங்கிக் கடன்களைப் பெறமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வங்கிக் கடனை 12 மாதத்திற்குள் திருப்பிச் செலுத்த வேண்டும். ஒவ்வொரு விவசாயிகளும் இரண்டு இலட்சம் ரூபா மட்டுமே கடனாகப் பெற முடியும்.

கடந்த 2010 ஆம் ஆண்டு டிசம்பர மாதம் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த இலகு கடன்திட்டம் 2012 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும் என வங்கித் தகவல்கள் தெரிவிக்கின்றன. (110)

## சண்டிகா பரமேஸ்வரி ஆலயத்தின் இரதோற்சவம்

(வடமராட்சி)

பருத்தித்துறை ஸ்ரீ சண்டிகா பரமேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த தேர் உற்சவம் இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தின் மறுநாள் திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்குத் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது.

(100)

## ஏழு கண் பாலம் பலத்த சேதம்; அபாய எச்சரிக்கையுடன் பயணிக்கும் வாகனங்கள்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு சந்திக்கும் வழிப்பிள்ளையார் கோவிலுக்கும் இடைப்பட்ட பிரதான வீதிப் பகுதி கடுமையாகச் சேதமடைந்து காணப்படுவதன் காரணமாக மண்டைதீவுப் பகுதிக்கான போக்குவரத்து மிகுந்த சிரமத்துடன் நடைபெற்று வருவதாக பயணிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வீதிப் பகுதி இடையிடையே குன்றும் குழியுமாக காணப்படுவதுடன் ஏழுகண் பாலமும் பலத்த சேதமடைந்துள்ளது. இதன் கரைப்பகுதி கொங்கிறீற் சுவர் இடிந்து கடலில் வீழ்ந்துள்ளது. இதனால், இப்பாலத்தினூடாக பயணம் செய்யும் வாகனங்கள் மிகுந்த எச்சரிக்கையுடனேயே பயணிக்கும் நிலைக்குள்ளாகியுள்ளன.

அண்மையில் இவ்வீதிப் பகுதியில் காணப்பட்ட குன்றும் குழியுமான பகுதிகள் அப்பகுதிகளில் நிலைகொண்டுள்ள இலங்கை கடற்படையினரால் மண் போடப்பட்டு நிரவப்பட்டு வருகின்றது. இருந்தும் ஏழுகண் பாலம் மிகவும் ஆபத்தான பகுதியாகவே இருந்து வருகின்றது. மேலும் இப்பகுதிகள் சில மாதங்களுக்கு முன்பாக கடல் நீர் பெருக்கெடுத்து வீதியை ஊடறுத்துப் பாய்ந்த பகுதி என்பதும் குறிப்பிடத்தக்கது. (பா)

## இராஜகோபுர குடமுழுக்கு

(வவுனியா)

முல்லைத்தீவு வற்றாப் பளை கண்ணகி அம்மன் ஆலய இராஜகோபுர குட முழுக்கு வைபவம் எதிர்வரும் 20ஆம் திகதி புதன்கிழமை காலை 9.00 மணிக்கும், 11.00 மணிக்குமிடைப்பட்ட சுபநேரத் தில் நடைபெறவுள்ளது.

அடியார்களுடைய நலன் கருதி விசேட போக்குவரத்து ஏற்பாடுகளும் செய்யப்பட் டுள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது. (39)

## உதவிகள் வழங்கப்போவதாக அறிவித்திருந்த ஐ.ஓ.எம். நிறுவனம் ஒன்றையும் வழங்கவில்லை

### புனர்வாழ்வு பெற்றவர்கள் கவலை

(கிளிநொச்சி)

தடுப்பு முகாம்களிலிருந்து புனர்வாழ்வு பெற்று விடுதலையாகிவந்த முன்னாள் புலி உறுப் பினர்களுக்கான சுயதொழில் முயற்சிகளுக்கு உதவிகளை மேற்கொள்வதாகக் கூறி ஐ.ஓ.எம். நிறுவனம் தங்களிடம் பதிவுகளைப் பெற்றபோதும் இதுவரை எவ்வித உதவிகளும் மேற்கொள்ளப் படவில்லை எனப் புனர்வாழ்வு பெற்றவர்கள் கவலைதெரிவித்துள்ளனர்.

சுயதொழில் மேற்கொள்வதற்காக 80,000 ரூபா பெறுமதியான உபகரணங்கள் மானியமாக வழங்கப்படும் என குறித்த நிறுவனம் அறிவித்திருந்தபோதிலும் இதுவரை தங்களுக்கு எதுவித உதவிப் பொருட்களும் கிடைக்கவில்லை என்றும் வெறுமனே பதிவுகளை மாத்திரம் மேற் கொண்டுள்ளனர் எனவும் அவர்கள் தெரி வித்துள்ளனர்.

இதனைவிட குறைந்த வட்டியுடன் நீண்டகால தவணை அடிப்படையில் சுயதொழில் முயற்சிக் கான கடன்கள் வழங்கப்படும் என புனர்வாழ்வு அமைச்சு அறிவித்து பிரதேச செயலகங்கள் ஊடாக பதிவுகளை மேற்கொண்டிருந்தபோது அதுவும் பயனளிக்கவில்லை என விடுதலையான முன் னாள் புலி உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் பெரும்பாலான முன்னாள் புலி உறுப்பினர்கள் எவ்வித தொழில் வாய்ப்பும் இன்றி காணப்படுவதனையும், வேலைதேடி அலைவதனை யும் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. (29)

## சித்திரா பௌர்ணமி

(வவுனியா)

இந்துக்களினால் விசேட மாக அனுஷ்டிக்கப்படும் சித் திரா பௌர்ணமி தினமான இன்று ஞாயிற்றுக்கிழமை வவு னியாவிலுள்ள ஆலயங் களில் விசேட அபிஷேக ஆராதனைகள், சித்திரபுத் திரனார் கதைபடித்தல், சித் திரைக் கஞ்சி வழங்குவது போன்ற நிகழ்வுகள் இடம் பெறவுள்ளது. இதேவேளை, யாழ்ப்பாணத்திலும் சித்திரா பௌர்ணமி நிகழ்வு நடை பெற ஏற்படாகியுள்ளது. (39)

# இன்றைய சிறார்களின் வளமான எதிர்காலத்திற்கு அனைவரும் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும்

### ஈ.பி.டி.பி. கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன்

(கிளிநொச்சி)

**சிறார்களுக்கான வளமான எதிர் காலத்தை ஏற்படுத்துவதற்கு நாம் அனைவரும் ஒன்று பட்டு செயற்பட வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் கிளி நொச்சி மாவட்ட அமைப்பாளர் வை. தவநாதன் தெரி வித்தார்.**


கிளிநொச்சி செல்வாநகர் முன்பள்ளி விளை யாட்டுப் போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த கால யுத்தம் சிறுவர்களைக் குறிப்பாக, வன்னிப் பிரதேச சிறுவர்களைப் பல்வேறு பாதிப்புக் களுக்கு உள்ளாக்கியுள்ளது. ஆனால், தற்போது அந்த நிலைமை இல்லை. எனவே, இன்றைய சிறார் களுக்கான வளமான எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய பொறுப்பு எங்கள் அனைவருக்கும் உள்ளது. அந்த வகையில் நாம் அனைவரும் ஒன்று பட்டு எமது சிறார்களின் வளமான எதிர்காலத்திற்கு உழைக்கவேண்டும்.

எமது கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் தனது நிதியிலிருந்து இந்த முன்பள்ளி யினை புனரமைத்துக் கொடுத்துள்ளார். மேலும் இந்த முன்பள்ளியினைப் புனரமைப்பதற்கு தான் உதவிகள் புரிவதாக முன்பள்ளி திறப்பு விழாவின் போது அவர் குறிப்பிட்டுள்ளார். குறிப்பாக இப்பிரதேசத்தின் வளர்ச்சி யில் எமது கட்சி அக்கறையோடு செயற்பட்டு வரு கிறது. எனவே, மக்களும் சரியான பாதையினைத் தெரிவு செய்து வாழ்வில் முன்னோக்கிச் செல்வது பற்றிச் சிந்திக்க வேண்டும். அனைத்தையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை அபிவிருத்தியை நோக்கி அழைத்துச் செல்பவர்களின் வழியில் மக்களும் அணிதிரள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இந்த விளையாட்டுப் போட்டி நிகழ்வில் கிளி நொச்சி வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப் பாளர் கணேசலிங்கம், கிராம அலுவலர் நேசராஜ் குமார், பாடசாலை அதிபர் கேதீஸ்வரன், பிரதேச இராணுவ அதிகாரி லெப்ரினன் ஜெயவீர, கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஆனந்தசோதி, பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (29)



நல்லூர் கைலாச பிள்ளையார் ஆலயத்தில் நேற்று நடைபெற்ற இரதோற்சவத்தின்போது விநாயகப் பெருமான் ரதத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருளாசி வழங்குவதைக் காணலாம்.

(படப்பிப்பு: கார்த்திகேயன்)

## பொலிஸாரின் ஏற்பாட்டில் புத்தாண்டு சிறப்பு நிகழ்வு

(வடமராட்சி)

நெல்லியடிப் பொலிஸாரின் ஏற்பாட்டில் புத்தாண்டு சிறப்பு நிகழ்வு இன்று வடமராட்சி மாலுசந்தி மைக்கல் விளை யாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலை மையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பல்வேறு விளையாட் டுக்கள் இடம்பெறவுள்ளன.

காலை 6.00 மணிக்கு ஆரம்ப மாகும் விளையாட்டு நிகழ்வில் மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம் மற்றும் பாரம்பரிய விளையாட் டுக்களான கயிறு இழுத்தல், தலையணைச் சண்டை, முட்டி உடைத்தல் ஆகிய போட்டி களும் நடைபெறவுள்ளன.

கரப்பந்தாட்டப் போட்டியில் இமையாணன் இளைஞர் அணியை எதிர்த்து கரவெட்டி வாலிபர் வட்ட அணி மோத வுள்ளது.

இந்நிகழ்வில் பொதுமக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (100)

### வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில்

## அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கும் பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்கள்

அண்மையில் குடத்தனை யில் அமைந்துள்ள வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதி பர் உபபணிமனையில் உதவி அரசாங்க அதிபர் ந. திருலிங்க நாதன் தலைமையில் அரசசார் பற்ற நிறுவனங்களின் பிரதிநிதி கள் கலந்துகொண்ட கலந்துரை யாடலில், நான்கு கிராம அலு வலர் பிரிவுகளில் பல்வேறு வேலைததிட்டங்களை மேற் கொள்வதெனத் தீர்மானிக்கப் பட்டது.

இதன்படி செம்பியன்பற்று வடக்கு கிராம அலுவலர் பிரி வில் மாமுனைக் கிராமத்தில் யூ.என்.டீ.பி. நிறுவனத்தின் நிதி உதவியுடன் மீன் ஏல விற்பனை நிலையம், பாலர் பாடசாலைப் பூங்கா என்பனவும், என்றிப் நிதி உதவியுடன் சனசமூக நிலை யம் அமைப்பதெனவும், செம் பியன்பற்று வடக்கு கிராமத் தில் யூ.என்.டீ.பி. நிதி உதவி யுடன் பொதுநோக்கு மண்டபம், மீன் ஏல விற்பனை நிலையம், சனசமூக நிலையம் எனபனவும், சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் நிதி உதவியுடன் முன்பள்ளிக் கட்டடம் அமைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.


அத்துடன் இக்கிராமத்தில் 100 தற்காலிக வீடுகள், மலசல கூடங்கள் அமைப்பதற்கும், 100 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளையும் வழங்குவதாக சோ-ஆ (Zoa) நிறுவனம் ஒப்புக்கொண்டுள்ளது.

செம்பியன்பற்று தெற்கு கிராம அலுவலர் பிரிவில் செம் பியன்பற்று தெற்கு கிராமத்தில் யூ.என்.டீ.பி. நிறுவன நிதியுதவி யுடன் சனசமூக நிலைய முன் பள்ளி, செம்பியன்பற்று அரசி னர் தமிழ்க் கலவன் பாடசாலை விளையாட்டு மைதான வேலி அமைத்தல் மற்றும் வாழ்வாதார உதவிகளை வழங்குவதாகவும்,

வத்திராயன் கிராம அலு வலர் பிரிவில் என்றிப் நிதி உதவியுடன் அண்ணமார்குளம், ஆனைவிழுந்தான்குளம், பட்டி யடிக்குளம், மருதடிக்குளம் ஆகிய நான்கும் ஆழமாக்கப்பட விருப்பதாக கமத்தொழில் திணைக் கள ஆணையாளர் அலுவலக பிரதிநிதி தெரிவித்தார். அத் துடன் 25 குடும்பங்களுக்கு வாழ் வாதார உதவிகளை வழங்குவ தாக சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஒப்புக்கொண்டுள்ளது.

செம்பியன்பற்று வடக்கு, தெற்கு, மருதங்கேணி கிராம அலு வலர் பிரிவுகளில் மாமுனை, செம்பியன்பற்று தெற்கு, தாளை யடி, மருதங்கேணி தெற்கு ஆகிய நான்கு கிராமங்களில் 350 நிரந்தர வீடுகள் அவுஸ் ரேலிய செஞ்சிலுவைச் சங்கத் தினால் அமைக்கப்படவிருப்ப தாக இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளைப் பிரதி நிதியால் தெரிவிக்கப்பட்டது.

இப்பிரதேசத்தில் மக்கள் மீளக் குடியமர்ந்த கிராமங்களிலுள்ள பிரதான மற்றும் குறுக்கு வீதி கள் திருத்துவதற்கு கேள்விப் பத்திரம் கோரப்பட்டுள்ளதாக வும், வெகுவிரைவில் வீதித் திருத்தவேலைகள், சந்தைக் கட்டடவேலைகள் ஆரம்பிக்கப் படுமெனவும் பருத்தித்துறைப் பிரதேச சபை வட்டாரங்கள் தெரி வித்தன. (70)



கொழும்புத்துறை சனசமூக நிலைய விநாயகர் விளையாட்டுக்கழகத்தின் 40ஆவது ஆண்டு நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வெற்றியீட்டிய வீரர் ஒருவருக்கு தங்கப்பதக்கம் அணிவிப்பதையும், விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் காணலாம். (52)

# செம்பியன்பற்று பிரதேசசபை இயங்காமையால் பல்வேறு அசௌகரியங்களை எதிர் கொள்ளும் மக்கள்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் அமைந்துள்ள பருத்தித்துறை பிரதேசசபையின் செம்பியன்பற்று உப அலுவலகம் முழுமையாக இயங்காத காரணததினால் மக்கள மீள்குடியமர்ந்த கிராமங்களில் எந்தவொரு அபிவிருத்தி வேலைகளும் இங்கு நடைபெறவில்லை.

கடந்த 30 வருடகாலப் போர், சுனாமி அனர்த்தம் காரணமாக இப்பிரதேசத்தில் உள்ள கட்டுமானங்கள் யாவும் முற்றாக அழிவடைந்துள்ளன. பிரதேச சபைக்குரிய வீதிகள் கடந்த 30 வருடத்திற்கு மேலாகத் திருத்தப்படவில்லை, சனசமூக நிலையக் கட்டடங்கள், சபையின் பொது நூலகம், சந்தைக் கட்டடங்கள் எதுவும் திருத்தி அமைக்கப்பட்டு, அல்லது புதிதாகக் கட்டியோ மக்கள் பாவனைக்கு இதுவரை விடபபடவில்லை.

துவிச்சக்கரவண்டி, மற்றும் அனுமதிப் பத்திரங்கள், பிரதேச சபையுடன் தொடர்புடைய சகல அலுவல்களுக்கும் சுமார் 45 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள பருத்தித்துறை பிரதேசசபைக்குச் சென்றே கருமங்களை முடிக்கவேண்டிய நிலை உள்ளது.

ஒன்றரை வருடங்களுக்கு முன்பாக மக்கள் மீளக்குடியமர்வதற்கு முன்னரே இப் பிரதேசத்தில், பிரதேசசபையினால் திருத்தப்படவேண்டிய வீதிகள், அலுவலகங்கள், நூல் நிலையங்கள் ஆகியவற்றின் விபரங்கள் சேகரிக்கப்பட்டன. திருத்த வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டதாகக் கூறப்பட்ட போதிலும் எந்தவொரு வேலையும் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை. பிரதான குறுக்கு வீதிகள் திருத்தப்படாமையால் வாகனங்கள் பொது மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

ஐந்து வருடங்களாக இடம் பெயர்ந்து பல்வேறு இடங்களில் சொல்லொணாக் கஷ்டங்களுக்கு மத்தியில் அவல வாழ்ககை வாழ்ந்த இப்பிர்தேச மக்கள் மீளக் குடியமர்ந்து 7 மாதங்கள் மட்டுமே முடிவடைந்த நிலையில தமது வாழ்க்கை நிலையை பூரணமாக முடிவுறுத்தாக நிலையில் எதுவித அபிவிருத்திப் பணிகளையும் இப்பிரதேசத்தில் மேற்கொள்ளாத பருத்தித்துறை பிரதேசசபையினர், தமக்குரிய வரிகளை மட்டும் அறவிடுவதில் முயற்சிகளை மேற்கொண்டு மீளக் குடியேறியுள்ள மக்களுக்கு மேலும் கஷடங்களைக் கொடுப்பதாக இப் பிரதேச மக்கள் குறை கூறியுள்ளனர்.

இப்பிரதேசத்தில் உள்ள அபிவிருவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு உதவியாக இப் பிரதேசத்திலுள்ள செம்பியன்பற்று, குடத்தனை உப அலுவலகங்களை முழுமையாக இயங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென் பொது மக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (70)





நெடுந்தீவு உதவிஅரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட, பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டியில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரீன் (உதயன்) ஒலிம்பிக்தீபம் ஏற்றி ஆரம்பித்து வைப்பதையும் கழகங்களின் விளையாட்டு நிகழ்வையும் படங்களில் காணலாம்

# மின்னல் வேகத்தில் மின் கம்பத்துடன் மோதல் ஒருவர் உயிரிழப்பு; மற்றவர் ஆபத்தான நிலையில்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.முனீஸ்வரன் வீதியில் அங்காடி வியாபாரத்தில் ஈடுபட்டுவரும் வியாபாரி ஒருவரும் அவரது உதவியாளர் ஒருவரும் வல்லை வெளிப்பகுதியில் புதுவருடப்பிறப்பன்று பிற்பகல் பயணம் செய்த மோட்டார் வாகனம் மின்கம்பத்துடன் மோதி விபத்திற்குள்ளாகியதில் உதவியாளர் பலியானார். அங்காடி வியாபாரி ஆபத்தான நிலையில் யாழ்.போதனாவைததியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

சண்டிலிப்பாய் வீரபத்திர் கோவிலடியைச் சேர்ந்த தே.தேவமகிந்தன் (வயது 23) என்ற அங்காடி வியாபார உதவியாளரே பலியானார். குறித்த அங்காடி வியாபாரியான கரணவாய் நவிண்டிலைச் சேர்ந்த சோ.விஜயரட்ணம்(வயது 32) படுகாயமடைந்த நிலையில் யாழ்போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, குறித்த அங்காடி வியாபாரியின் வீட்டிற்கு அவரது உதவியாளர் கைவிசேடம் வாங்குவதற்காக சென்றுவிட்டு வல்லை வெளியூடாக யாழ்.நகர் திரும்பிக்கொண்டிருக்கையில் இவ் விபத்துச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

வல்லை வெளிப்பகுதியில் அதிகவேகத்துடன் பயணித்த மோட்டார் வாகனம் கட்டுப்பாட்டை மீறி மின்கம்பத்துடன் மோதிக்கொண்டது. அதனால் குறித்த இருவரது தலையிலும் பலத்த காயங்கள் ஏற்பட்டதுடன் மின்கம்பம் முறிந்து மோட்டார் வாகனத்தின் மீது விழுந்ததில் மோட்டார் வாகனம் சுக்குநூறாக சேதமடைந்தது. படுகாயமடைநத இருவரும் அம்புலன்ஸ் வாகனத்தின் உதவியுடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களில் குறித்த உதவியாளர் சிகிச்சை பலனளிக்காது உயிரிழந்தார். வியாபாரி தொடர்ந்தும் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார். (பா)

# சிறப்பாக நடைபெற்ற புதுவருட கொண்டாட்டங்கள்

(வவுனியா)

வவுனியாவில் இம்முறை சித்திரைப்புத்தாண்டு மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அன்றையதினம் வவுனியாவில் விளையாட்டுப்போட்டிகளும், பாரம்பரிய நிகழ்வுகளும் மிகவும் சிறப்பாக நடைபெற்றதுடன் புத்தாண்டு பிறந்த நேரத்தில் ஆலயததில் மக்கள் கூடி வழிபாடுகளில் ஈடுபட்டதுடன் விசேட சமய ஆராதனைகளும் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வைரவபுளியங்குளம் ஆதி விநாயகர் ஆலயத் தேர்த் திருவிழாவில் பெருமளவிலானவர்கள் கலந்து கொண்டனர். அதே நேரத்தல் வர்த்தக நிலையங்களும் திறக்கப்பட்டு நாள் வியாபாரம் நடைபெற்றதுடன் கொடுக்கல் வாங்கல்களும் இடம்பெற்றது. (39)

# கண்பரிசோதனை முகாம்

(வடமராட்சி)

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் கண்பரிசோதனை முகாம் ஒன்று இன்று பகல் 9.30 மணியளவில் நெல்லியடி செவிப்புலனற்றோர் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் பாடசாலை மாணவர்களுக்கு கண்பரிசோதனை செய்யப்பட்டு கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன. தொடர்ந்து மாலை 5.45 மணிக்கு பணிப்பாளர் சபைக் கூட்டமும் மாதாந்தப் பொதுக்கூட்டமும் இடம்பெறவுள்ளது.

விசேட நிகழ்வாக இலங்கை வங்கியின் வடமாகாண செயற்பாட்டு முகாமையாளராக கடமையாற்றியவரும், ஓய்வு பெற்ற முன்னாள் லயன்ஸ் கழகத் தலைவருமான ஜி.எஸ்.சிவநாதனின் கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

## ஸ்ரீயின் இன்றைய பலன்

(17.04.2011 –ஞாயிற்றுக் கிழமை)

### பஞ்சாங்கக் குறிப்புக்கள்

கரவருஷம் சித்திரை 04 ஆம்நாள்

இராகுகாலம் 4.34 – 6.04, சுபநேரம் 9.04 –10.34,

நட்சத்திரம்:அத்தம் பி.ப.3.30, வரை

திதி:சித்திராபூரணை விரதம்

சித்திரகுப்தர் விரதம்

இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

**மேடம்:–** யோசனை மிகுதி, காரியத்தடை, மனக்குழப்பம்.

**ரிஷபம்:–** நற்செய்தி, பணவரவு, நண்பர் உதவி.

**மிதுனம் :–** அதிக செலவு, கோபம், அவமானம்.

**கடகம்:–** உட்பகை, பொருள் இழப்பு, வேண்டாத நிகழ்வு.

**சிம்மம்:–** கடின உழைப்பு, வீண் சண்டை, காரியசித்தி.

**கன்னி :–** முயற்சி வெற்றி, நற்செய்தி, மன மகிழ்ச்சி.

**துலாம் :–** பயம், பொருள் இழப்பு, வேண்டாத செயல்.

**விருச்சிகம்:–** குதூகலம், தேகாரோக்கியம், காரியவெற்றி.


**தனுசு:–** மேலாளர் பாராட்டு, மனமகிழ்ச்சி, காரிய சித்தி.

**மகரம்:–** நற்செய்தி, பணவிரயம், வீணான பயம்.

**கும்பம் :–** முயற்சிவெற்றி, மனமகிழ்ச்சி, பொருட்செலவு.

**மீனம்:–** வீணான கற்பனை, அதிக செலவு, பணவரவு.

# இரங்கல் தெரிவித்து கடைஅடைப்பு



(யாழ்ப்பாணம்)

வல்லை வெளிப்பகுதியில் நேற்று முன்தினம் விபத்தில் சிக்கி உயிரிழந்த யாழ்.அங்காடி வியாபார உதவியாளரின் மரணத்திற்கு இரங்கல் தெரிவிக்கும் முகமாக யாழ்.முனீஸ்வரன் வீதி அங்காடி வியாபாரிகள் நேற்றுத் தமது கடைகளைப் பூட்டியும் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டும் துக்கம் அனுஷ்டித்தனர்.

யாழ்.முனீஸ்வரன் வீதியில் அமைந்துள்ள சுமார் 63 இற்கும் மேற்பட்ட அங்காடிக் கடைகள் பூட்டப்பட்டிருந்தமையை அடுத்து அப்பகுதி நேற்று வெறிச்சோடிக் காணப்பட்டது.

அத்துடன் நகரின ஏனைய பகுதிகளிலும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த அங்காடி வியாபாரிகள் தமது வியாபார நடவடிக்கைகளை நிறுத்தி இவ் இரங்கல் நிகழ்வுக்கு ஆதரவு தெரிவித்தமையை அவதானிக்க முடிந்தது. (பா)

# மகளிர் அபிவிருத்தி நிலைய தையல் அழகியல் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)


வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் யாழ்.மாவட்டத்தில் நடத்தப்படும் மகளிர் அபிவிருத்தி நிலைய தையல் அழகியல் கண்காட்சி எதிர்வரும் 18,19 ஆம் திகதிகளில் காலை 9.30 மணி முதல் 4.30 மணிவரை யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ்மாவட்ட கிராம அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர் திருமதி நவமணி அலோசியஸ் ஜெயராஜன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ் ஆகியோர் பிரதமவிருந்தினர்களாகவும், வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் ஜே.ஜே.சி. பெலிசியன், யாழ்.பிராந்திய ஆணையாளர் திருமதி பத்மினி சிவலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும்,

கௌரவ விருந்தினர்களாக யாழ்.பிரதேச செயலாளர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரன், யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி க.பொன்னம்பலம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (கா)

# இலங்கை மீதான சர்வதேச விசாரணை பிரிட்டன் பிரதமர் கோரிக்கை விடவில்லை

## ஊடகச் செய்திகள் கற்பனை என்கிறார் பீரிஸ்



பிரித்தானியப் பயணத்தை முடித்துள்ள அவர், கொழும்பு ஊடகம் ஒன்றின் இலண்டன் செய்தியாளருக்கு இவ்வாறு கூறியுள்ளார்.

(கொழும்பு)

**இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் குறித்து விசாரணைசெய்வதற்கு அனைத்துலக விசாரணைக்குழுவை அமைக்குமாறு பிரித்தானியப் பிரதமர் கோருவதாக வெளியாகும் செய்திகள் முற்றிலும் பொய்யானவை என்று இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் குறித்து விசாரிக்க அனைத்துலக விசாரணைக்குழு அமைக்கப்பட வேண்டும் என்று பிரித்தானியப் பிரதமர் கேட்பதாக பிரித்தானிய ஊடகங்களில் அவ்வப்போது, வெளியாகின்ற செய்திகள் தவறானவை.

இது ஒரு கற்பனை. சிலர் இதனைப் பரப்புரை செய்கிறார்கள். பிரித்தானியா ஒருபோதும் அனைத்துலக விசாரணையைக் கேட்கவில்லை.

அவர்கள் நம்பகத்தன்மையானதும் காத்திரமானதுமான விசாரணை பற்றியே பேசுகின்றனர்.

இலங்கை அரசாங்கம் நம்பகத் தன்மை வாய்ந்த- காத்திரமான விசாரணைகளை நடத்துவதற்கே நல்லிணக்க ஆணைக்குழுவை அமைத்துள்ளது.

இந்த நல்லிணக்க ஆணைக்குழுவின் செயற்பாடுகள் குறித்து பிரித்தானிய அரசுக்கு விபரமாகக் கூறியுள்ளேன்.

எந்தவொரு ஐ.நா குழுவும் இலங்கையில் விசாரணைக்கு வராது. இந்த விடயத்தில் இலங்கையின் நிலைப்பாடு தெளிவானது, உறுதியானது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## சுனாமி அனர்த்தம் தொடர்பாக வெளியான செய்திகள் தவறாகும்

### அனர்த்த மத்திய நிலையம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஆழிப்பேரலை தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள தகவல்கள் அடிப்படையற்றது என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்தது.

ஆழிப்பேரலை குறித்து திருகோணமலை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் பரப்பப்பட்ட அபாய எச்சரிக்கைகள் முற்று முழுதான வதந்தியே என மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார்.

இதனிடையே வளி மண்டலவியல் திணைக்களம் விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

ஆழிப்பேரலை வருவதற்கு சில தினங்களுக்கு முன்னரே அறியக் கூடிய கருவிகள் இதுவரை எங்கும் கண்டு பிடிக்கப்பட வில்லை என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஆழிப்பேரலை தொடர்பாக வெளியிடப்பட்டு வரும் பிரசாரங்களில் அடிப்படைத் தன்மை எதுவும் இல்லை எனவும் அந்தத் திணைக்களத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பு.டீ. சமரசிங்க தெரிவித்தார்.

## இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் பாராட்டத்தக்கது

### அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் யுத்தம் முடிவடைந்த பின்னர் நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் பாராட்டத்தக்கது என அமெரிக்க ஐக்கிய இராச்சிய காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

றிபப்பிளிகன் கட்சியின் காங்கிரஸ் உறுப்பினர் ஜோ வில்சன் அந்த நாட்டு காங்கிரஸ் சபையின் முன்னிலையில் தமது கருத்தை வெளியிட்டுள்ளார்.

புத்தாண்டில் இலங்கை மக்கள் புதிய எதிர்பார்ப்புகளையும், தெளிவையும் பெற்றுக்கொள்வார்கள் என தாம் நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காங்கிரஸ் சபை உறுப்பினரின் கருத்தை மேற்கோள்காட்டி அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், பயங்கரவாதம் முறியடிக்கப்பட்ட பின்னர் இரண்




டாவது சித்திரைப்புத்தாண்டை இலங்கை மக்கள் கொண்டாடுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கை- அமெரிக்க நாடுகளுக்கிடையிலான அரசியல், பொருளாதாரம், மற்றும் தனிநபர் உறவுகளை எதிர்காலத்தில் மேலும் அதிகரித்துக்கொள்ள முடியும் என ஜோ வில்சன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பல்வேறுவகையான மாற்றங்களுடன் தேர்தல் சட்டத்தில் விரைவில் திருத்தம்

### அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தகவல்

(கொழும்பு)

தேர்தல் சட்டங்களில் திருத்தம் கொண்டு வரப்பட உள்ளதாக அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார். தேர்தல் திருத்தச் சட்டம் தொடர்பான சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் பரிந்துரைகள் விரைவில் அமுல் படுத்தப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் சட்டத் திருத்தம் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவராக தினேஷ் குணவர்தன செயற்படுகின்றார். ஜனாதிபதி, பொது, மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் போது இறுதி நேரத்தில் வாக்காளர் இடாப்பு பதிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென பரிந்துரை செய்யப் பட்டுள்ளது.

இந்தச் சட்டத் திருத்தத்தின் மூலம் 18 வயதைப் பூர்த்தி செய்யும் இளைஞர் யுவதிகள் வாக்களிப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. தேர்தல் நடைபெறும் வருடத்திற்கு முன்னைய வருட வாக்காளர் இடாப்பு தரவுகளே வாக்காளர் பட்டியல் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படுகின்றது.

புதிய சட்டத்தின் மூலம் எந்த நேரத்திலும் வாக்காளர்கள் தங்களைப் பதிவு செய்து கொள்ள முடியும் என



குறிப்பிடப்படுகிறது. இந்தப் புதிய நடைமுறை நாட்டின் ஜனநாயகத்தை மேலும் வலுப்படுத்தும் என அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தேர்தலில் போட்டியிடும் சகல வேட்பாளர்களும் பொலிஸ் அறிக்கையை தமது வேட்பு மனுவுடன் இணைக்க வேண்டுமென்ற நிபந்தனை அறிமுகப்படுத்தப்படவுள்ளது. வேட்பாளர்கள் குற்றச் செயல்களில் ஈடுபடவில்லை என்பதனை உறுதிப் படுத்தும் நோக்கில் இந்தப் புதிய சட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

## ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கையை தமிழிலும்,சிங்களத்திலும் மொழி பெயருங்கள்

### அரசிடம் ஆசிய மனித உரிமை அமைப்புக் கோரிக்கை

(கொழும்பு)

ஐ.நா நிபுணர் குழுவின் அறிக்கையை தமிழிலும் சிங்களத்திலும் மொழி பெயர்த்து வெளியிட வேண்டும் என்று ஆசிய மனித உரிமைகள் அமைப்பு இலங்கை அரசிடம் கோரியுள்ளது.

நிபுணர்குழு சமர்ப்பித்துள்ள அறிக்கையில் உள்ள விடயங்கள் இதுவரை வெளியிடப்படவில்லை. ஐ.நாவின் அறிக்கையை பொதுமக்கள் பார்வையிடுவது முக்கியமானது.

பலர் அதனை முக்கியமாகக் கருதினார்கள். ஆனால் அதன் உள்ளடக்கத்தை வெளியிட மறுப்பது ஏற்றுக் கொள்ள முடியாதது.

அறிக்கையில் உள்ள விடயங்கள் தொடர்பில் அறிவதற்கு மக்களுக்கு உரிமைகள் உண்டு. இலங்கை அரசு அந்த அறிக்கையை நிராகரித்துள்ளது.

இதனால் மக்கள் மத்தியில் பலத்த சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது. மக்களில் சிலர் அதனை நிராகரிக்கலாம், ஒரு சிலர் ஏற்றுக்கொள்ளலாம்.

ஆனால் அதில் என்ன உள்ளது என்பதை மக்கள் அறியவேண்டும். நிபுணர்குழுவின் அறிக்கையை ஊடகங்கள் மூலம் வெளியிட இலங்கை முன் வரவேண்டும்.

இந்த அறிக்கை தமிழிலும், சிங்களத்திலும் மொழிபெயர்ப்பது அவசியம் என ஆசிய மனித உரிமைகள் அமைப்புத் தெரிவித்துள்ளது.

## இலங்கை மீதான விசாரணைக்குழுவை ஐ.நா செயலரே அமைக்க வேண்டும்

### அனைத்துலக நெருக்கடி அமைப்பின் தலைவர் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கான விசாரணைக்குழுவை ஐ.நா செயலாளர் நாயகம் மாத்திரமே அமைக்கவேண்டும் என்று அனைத்துலக நெருக்கடிகளுக்கான அமைப்பின் சிரேஷ்ட ஆய்வாளர் எலன் கீனன் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரச் அமைத்துள்ள விசாரணைக்குழு போதுமானதல்ல. எனவே அனைத்துல விசாரணைக்குழு அமைப்பது அவசியமானதொன்றாகும்.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைக்குழு அமைக்கும் சாத்தியப்பாடு ஐ.நாவின் பாதுகாப்புச் சபைக்கோ அல்லது மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கோ கிடையாது.

ஏனெனில் இலங்கைக்கு ஆதரவு வழங்கிவரும் சீனா மற்றும் ரஷ்யா போன்ற நாடுகள் வீட்டோ அதிகாரம் கொண்டவை. எனவே ஐ.நா செயலாளர் நாயகம் தனது அதிகாரத்திற்கு உட்பட்ட வகையில் ஒரு விசாரணைக்குழுவை அமைக்கவேண்டும்.

அந்தக் குழு மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளக்கூடிய அதிகாரம் கொண்டதாக அமையவேண்டும் எனத் தெரிவித்துள்ளார். ஐ.நாவின் நிபுணர் குழு சமர்ப்பித்துள்ள அறிக்கை தொடர்பில் பதிலை வழங்குவதற்கான



அழுத்தம் ஐ.நா மீது பிரயோகிக்கப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபை அது தொடர்பில் தனது நிலைப்பாட்டை அறிவிக்கும் என நம்புகிறோம் என அனைத்துலக நெருக்கடிகளுக்கான அமைப்பின் மூத்த ஆய்வாளர் எலன் கீனன் மேலும் தெரிவித்துள்ளார்.

# நியாயமற்ற கோரிக்கை



(புதுடில்லி)

இந்தியன் பிரிமியர் லீக்கில் விளையாடும் இலங்கை கிரிக்கெட் அணி வீரர்களை இடையிலேயே நாடு திரும்புமாறு இலங்கை கிரிக்கட் சபை கோரியிருப்பதை இலங்கை அணியின் முன்னாள் வீரர் முத்தையா முரளிதரன் கண்டித்துள்ளார்.

இந்த வீரர்களை எதிர்வரும் மே 20 ஆம் திகதியே நாடு திரும்புமாறு இலங்கை கிரிக்கட் சபை கேட்டிருந்தது.

எனினும் தற்போது உடனடியாக அவர்களை நாடு திரும்பக்கோருவது நியாயமானதல்ல என்றும் முரளிதரன் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை கிரிக்கட்டின் இந்த அறிவிப்பு இலங்கை, இந்திய நாடுகளுக்கு இடையிலான கிரிக்கட் விளையாட்டு புரிந்துணர்வைப் பாதிக்கும் என்றும், இதன்காரணமாக இந்திய கிரிக்கட்டில் இருந்து இலங்கை கிரிக்கட் பல அம்சங்களை இழக்கவேண்டி வரும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலகக் கிண்ணக் கிரிக்கட் போட்டிகளின் பின்னர் இலங்கைக்கு 25 மில்லியன் டொலர்கள் கிடைக்கவேண்டியுள்ளது. இந்தியாவே இலங்கை வீரர்களுக்கு பணம் உழைக்கக்கூடிய வழியைக் கொண்டிருக்கிறது. அதாவது நிதி என்ற அடிப்படையில் இந்தியாவிலேயே இலங்கை தங்கியுள்ளது.

எனவே இந்த விடயத்தை இலங்கை கிரிக்கட் சபை கவனமாக அணுக வேண்டும் என்றும் முரளிதரன் கோரியுள்ளார்.

# விதிமுறையில் வேண்டும் மாற்றம்

(புதுடில்லி)

விளையாட்டு வீரர்களுக்கும் பாரத ரத்னா விருது வழங்கும் வகையில் அதன் விதிமுறையில் மாற்றம் கொண்டு வர வேண்டும் என மத்திய உள்துறை அமைச்சகத்திடம் வலியுறுத்தப்படும் என்று மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் அஜய் மக்கான் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியது: பாரத ரத்னா விருது கலை, இலக்கியம், சமூக சேவை, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றில் சிறந்து விளங்குபவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது. விளையாட்டுத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. எனவே விளையாட்டு வீரர்களுக்கும் இந்த விருதை வழங்க வேண்டும் என உள்துறை அமைச்சகத்திடம் விளையாட்டு அமைச்சகம் வலியுறுத்தும்.


இந்தியா ஒலிம்பிக்கிலும் மற்ற சர்வதேச விளையாட்டுகளிலும் சிறந்து விளங்க வேண்டும் என்று விரும்புகிறோம். எனவே பாரத ரத்னா விருது



துக்கு விளையாட்டு வீரர்களை கருத்தில் கொள்ள வேண்டும்.

இந்த விடயத்தை உள்துறை அமைச்சகத்திடம் எடுத்துச் செல்வோம். விளையாட்டு வீரர்களுக்காக பாரத ரத்னா விருது விதிமுறையில் மாற்றம் கொண்டு வரவேண்டும் என்றார்.

# மீண்டும் வருகிறார் கங்குலி?



(கொச்சி)

நான்காவது ஐ.பி.எல். போட்டியையொட்டி கடந்த ஜனவரி மாதம் நடந்த ஏலத்தில் இந்திய முன்னாள் தலைவர் சௌரவ் கங்குலியை எந்த அணிகளும் வாங்காமல் உதாசீனப்படுத்தியதால் கடும் விமர்சனங்கள் எழுந்தன. ஐ.பி.எல்.-இல் இடம் கிடைக்காத அதிருப்தியில் உள்ள கங்குலி கொல்கத்தாவில் நடக்கும் போட்டிகளைப் பார்ப்பதை தவிர்த்து வருகிறார்.

இந்த நிலையில் அவர் கொச்சி டஸ்கர்ஸ் அணியில் விளையாட வாய்ப்பிருப்பதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன. கொச்சி அணிக்காக ஆட இருந்த அவுஸ்ரேலிய வீரர் ஸ்டீவன் ஸ்மித் காயம் காரணமாக ஐ.பி.எல். போட்டியை விட்டு விலகி உள்ளார். அவருக்குப் பதிலாக கங்குலியை சேர்க்க கொச்சி அணி ஆர்வமாக இருப்பதாகவும், அதற்கான முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகவும் கொச்சி அணியின் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

# சிறந்த வீரருக்கான விஸ்டன் விருது கிடைத்தது மகிழ்ச்சியளிக்கின்றது

(மும்பை)

கடந்த வருடத்தின் சிறந்த வீரருக்கான விஸ்டன் விருதுக்கு தன்னைத் தெரிவு செய்தமை மகிழ்ச்சியளிப்பதாக உள்ளதென சச்சின் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் கொச்சி அணியுடன் நடைபெற்ற போட்டியில் தோல்வியடைந்த பின் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இரு அணியிலும் துடுப்பாட்டம், பந்து வீச்சு சமபலமாக இருந்தது. ஆனால் எங்கள் அணியின் களத்தடுப்பை விட கொச்சி அணியின் களத்தடுப்பு சிறப்பாக இருந்தது. எங்கள் அணியின் மோசமான களத்தடுப்பினால் தோல்வி அடைந்தோம். சில பிடிகளைத் தவற விட்டோம். நாங்கள் துடுப்பாட்டம் செய்தபோது 160 முதல் 165 ஓட்டங்கள் வரை நல்ல ஓட்ட எண்ணிக்கை என்று கருதினோம். ஆனால் ஆடுகளம் முழுவதும் துடுப்பாட்டத்திற்கு வசமானது. மக்கலம் அடித்த பந்தை தொடக்கத்திலேயே பிடியை (ரோகித் சர்மா) தவறவிட்டோம். இந்தப் பிடி தவறமால் இருந்தால் வெற்றி பெற்று இருக்கலாம். மக்கல்லமின் விக்கெட்டை மலிங்க கைப்பற்றிய போதும் எங்களுக்கு வாய்ப்பு இருந்தது.

ஆனால் அப்போது சில களத்தடுப்பு மோசமாக இருந்தது. குறை சொல்ல வேண்டுமானால் களத்தடுப்பை மட்டும் தான் சொல்ல முடியும். 19ஆவது ஓவரை அலி முர்சாவுக்கு கொடுத்தது



சரியானது தான். அதில் தவறு இல்லை. சதம் அடிப்பேன் என்று நான் நினைக்கவில்லை. சதம் அடித்தது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. ஹைதராபாத்தைச் சேர்ந்த இளம் வீரர் அம்பதி ராயுடுவின் ஆட்டம் சிறப்பாக இருந்தது. அவர் 19 வயதுக்குட்பட்ட இந்திய அணியில் விளையாடுவதாக நான் தற்போது தான் கேள்விப்பட்டேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

# விளையாட்டு அக்கடமி தொடங்குகிறார்

(மும்பை)

பஞ்சாபில் விளையாட்டு அக்கடமியைத் தொடங்க ஹர்பஜன் சிங் திட்டமிட்டுள்ளார். அதற்கான இடத்தைத் தேர்வு செய்யும் பணி இப்போது நடைபெற்று வருகிறது.


இதுகுறித்து ஹர்பஜன் சிங் கூறியதாவது: விளையாட்டு அக்கடமியைத் தொடங்கும் பணி நடைபெற்று வருகிறது. இதுதொடர்பாக மாநில அரசிடம் திட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஒலிம்பிக்கில் தங்கம் வென்று இந்தியாவுக்குப் பெருமை சேர்த்த அபினவ் பிந்த்ரா உள்ளிட்ட உலகத் தரம் வாய்ந்த விளையாட்டு வீரர்கள் பஞ்சாபில் உருவாகியுள்ளனர். சரியாக செயற்படும்போது தான் திறமைகள் வெளிப்படும்.

இப்போது விளையாட்டு மிக முக்கியமான ஒன்று. இளைஞர்கள் விளையாட்டில் சிறந்து விளங்க வேண்டும் என்பதற்காக அவர்களை தினந்தோறும் சந்தித்து வருகிறேன். ஒரு வீரரிடம் திறமை இருப்பதை கண்டுவிட்டால், அதை வெளிக்கொண்டு வர, நம்பிக்கையுடன் அவரை அணுகவேண்டும். விளையாட்டிற்கு வீரர்களை உருவாக்குவது எனது கடமை. அது சமூகத்திற்கும், நாட்டுக்கும் நல்லது என்றார்.

இப்போது பஞ்சாப் மாநிலத்தில் விளையாட்டுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. அங்கு இந்த ஆண்டு ரூ.100 கோடி விளையாட்டுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் 50இற்கும் மேற்பட்ட வீரர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

ஆசிய விளையாட்டு, கொமன் வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றவர்களுக்கு ரூ.7 கோடிக்கு மேல் பரிசுத் தொகை வழங்கப்பட்டுள்ளது. விளையாட்டு வீரர்களுக்கு அரசுப் பணி, உதவித்தொகை, ஓய்வூதியம் ஆகியவையும் கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளன.

உலகத் தரம் வாய்ந்த 13 மைதானங்களில் ஒன்று ஜலந்தரில் இப்போது



கட்டப்பட்டு வருகிறது. அது இந்த ஆண்டின் இறுதிக்குள் தயாராகிவிடும். இங்கு 4 விளையாட்டுப் பள்ளிகளும், ஒரு விளையாட்டுக் கல்லூரியும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முதல் சுற்றில் வென்ற அணிகள்

(யாழ்ப்பாணம்)

சென் ஜோன்ஸ் கல்லூரியும், யாழ். மாவட்ட துடுப்பாட்ட சங்கமும் இணைந்து நான்காவது வருடமாக நடாத்தும் சென் ஜோன்ஸ் கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் சிவசம்பு தனபாலன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் முதல் சுற்றுப் போட்டிகள் நேற்று முன்தினம் யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலை மைதானங்கள் நான்கில் நடைபெற்றன.

நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டிகளில் 16 அணிகள் நான்கு குழுக்களில் இடம்பெற்றிருந்தன.

இதில் குழு 'ஏ' பிரிவில் இருந்து சென் பற்றிக்ஸ் கல்லூரி, மன்னார் சென் சேவியர் கல்லூரி அணிகளும், குழு 'பி' இல் இருந்து யாழ். இந்துக் கல்லூரி மற்றும் வவுனியா மத்திய மகாவித்தியாலய அணிகளும், குழு 'சி' இல் இருந்து சென் ஜோன்ஸ் கல்லூரி மற்றும் யாழ். மத்திய கல்லூரி அணிகளும், குழு 'டி' இல் இருந்து கொக்குவில் இந்துக் கல்லூரி மற்றும் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணிகளும் காலிறுதிப் போட்டியில் விளையாடும் தகுதியைப் பெற்றுள்ளன.

இதேவேளை, இச்சுற்றுப் போட்டிகளில், வெளிமாவட்ட அணிகள் சிலவும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(மி,20)

# வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் பெருவிளையட்டுப்போட்டி முடிவுகள்

(நெல்லியடி)

வவுனியா வடக்கு கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையில் நிறைவடைந்த பெருவிளையாட்டுப் போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளது.

அதன்படி அதன் விபரங்கள் வருமாறு: கிரிக்கெட் ஆண்கள் முதலாமிடம் கிடாச்சூரி அ.த.க. பாடசாலை, இரண்டாமிடம் புதுக்குளம் ம.வி., மூன்றாமிடம் கனகராயன்குளம் மகா வித்தியாலயம், பெண்கள் பிரிவு: முதலாமிடம் பூம்புகார் கண்ணகி வித்தியாலயம், இரண்டாமிடம் புதுக்குளம் ம.வி, மூன்றாமிடம் ஓமந்தை மத்திய கல்லூரி.

எல்லே ஆண்கள் பிரிவு: முதலாமிடம் சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம், இரண்டாமிடம் புதுக்குளம் ம.வி, மூன்றாமிடம் கிடாச்சூரி அ.த.க. பாடசாலை, பெண்கள் பிரிவு: முதலாமிடம் நெடுங்கேணி ம.வி, இரண்டாமிடம் பூம்புகார் கண்ணகி வித்தியாயலம், மூன்றாமிடம் புதுக்குளம் ம.வி.

கரப்பந்து 15 வயதுப் பிரிவு ஆண்கள்: முதலாமிடம் கிடாச்சூரி அ.த.க. பாடசாலை, இரண்டாமிடம் புதுக்குளம் ம.வி, மூன்றாமிடம் கல்மடு ம.வி, பெண்கள் பிரிவு: முதலாமிடம் கிடாச்சூரி அ.த.க. பாடசாலை, இரண்டாமிடம் கல்மடு ம.வி., மூன்றாமிடம் கனகராயன்குளம் ம.வி, 17 வயது ஆண்கள் பிரிவு : முதலாமிடம் கிடாச்சூரி அ.த.க. பாடசாலை, இரண்டாமிடம் கல்மடு ம.வி, மூன்றாமிடம் புதுக்குளம் ம.வி, பெண்கள் பிரிவு : முதலாமிடம் கிடாச்சூரி அ.த.க. பாடசாலை, இரண்டாமிடம் சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம், மூன்றாமிடம் ஓமந்தை மத்திய கல்லூரி, 19 வயது ஆண்கள் பிரிவு : முதலாமிடம் கிடாச்சூரி அ.த.க. பாடசாலை, இரண்டாமிடம் புதுக்குளம் ம.வி, மூன்றாமிடம் புளியங்குளம் இந்துக் கல்லூரி, பெண்கள் பிரிவில்: முதலாமிடம் புதுக்குளம் ம.வி, இரண்டாமிடம் கல்மடு ம.வி, மூன்றாமிடம் ஓமந்தை மத்திய கல்லூரி.

வலய மட்டப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுக் கொண்ட பாடசாலைகள் மாவட்ட மட்டப் போட்டிகளுக்குத் தெரிவாகியுள்ளன என வவுனியா வடக்கு கல்வி வலய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் மங்களகுமார் தெரிவித்தார். (12)



# கடாபியை பதவி விலகுமாறு கூறுவது லிபியர்களை அவமானப்படுத்துவதற்குச் சமம்

## என்கிறார் கடாபியின் மகள்




(திரிபோலி)


லிபியத் தலைவர் கடாபி பதவியில் இருக்கும் வரை லிபியாவில் அமைதி திரும்பாது என்று அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் நாடுகள் விடுத்த கூட்டறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இதற்கிடையில், கடாபியை ராஜினாமா செய்யச் சொல்வது லிபியர்களை அவமானப்படுத்துவதற்குச் சமம் என்று கடாபியின் மகள் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, பிரிட்டன் பிரதமர் டேவிட கமரூன் மற்றும் பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கொலஸ் சர்கோசி மூவரும் இணைந்து ஒரு கூட்டறிக்கை வெளியிட்டுள்ளனர்.

அதில் கூறியிருப்பதாவது, கடாபி பதவியில் இருக்கும் வரை லிபியாவின் அமைதியான எதிர்காலத்தைக் கற்பனை செய்யக் கூட முடியாது. கடாபி பதவியில் இருக்கும் வரை, நேட்டோப் படைகள் லிபிய மக்களைக் காப்பதிலும், கடாபிக்கு நெருக்கடி கொடுப்பதிலும் முனைப்புடன் ஈடுபட வேண்டும் என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதற்கிடையில், கடாபியின் மகள் ஆயிஷா கடாபி நேற்று முன்தினம் திரிபோலியில், கடாபி ஆதரவாளர்களிடையே பேசிய போது, கடாபியை ராஜினாமாச் செய்யச் சொல்வது என்பது, லிபிய மக்களை அவமானப்படுத்துவதாகும். என் தந்தையைக் கொல்வதுதான் உங்கள் விருப்பம். லிபியர்களைப் பாதுகாப்பது போல நாடகம் ஆடுகிறீர்கள் என்று மேற்கத்திய நாடுகள் மீது குற்றம் சாட்டியுள்ளார்.

# உலகில் வயதானவர் மரணம்



(வொஷிங்டன்)


உலகின் மிக வயதானவர் என்று அறிவிக்கப்பட்ட அமெரிக்காவைச் சேர்ந்த 114 வயது தாத்தா நேற்றுமுன்தினம் மரணமடைந்தார். அமெரிக்காவைச் சேர்ந்தவர் வோல்டர் ப்ரூனிங் (114).

இவர் அந்நாட்டு ரயில்வே துறையில் எழுதுவினைஞராகப் பணியாற்றியவர். அமெரிக்காவின் வடபகுதியில் உள்ள மொன்டானா மாகாணத்தில் வசித்து வந்தார். இவர் நேற்று முன்தினம் காலமானார்.

இவர் தனது மூன்று வயதில், தனது தாத்தாவிடம் இருந்து முன்பு 1860 களில் அமெரிக்காவில் நடந்த உள் நாட்டுப் போர் பற்றி நிறையக் கேட்டறிந்தார். தன் வாழ்நாளில், ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகள் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதலையும் கண்டவர்.

உலகில் மிக அதிக வயதானவர் என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்ட ப்ரூனிங், கடந்தாண்டு அக்டோபரில் அளித்த பேட்டியில், நாம் இறக்கத்தான் போகிறோம். சிலர் இறப்பை நினைத்து அஞ்சுகின்றனர். மரணத்தைக் கண்டு பயப்பட வேணடாம். ஏனென்றால் நாம் பிறப்பதே இறப்பதற்காகத்தான் என்று தெளிவாகக் கூறினார்.

# அமெரிக்கச் செயற்கைக் கோள் வெற்றிகரமாக செலுத்தப்பட்டது



(கலிபோர்னியா)

உளவு செயற்கைக் கோளுடன் அமெரிக்க ரொக்கெட் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது.

கலிபோர்னியாவின் வான்டன்பெர்க் விமானப் படைத் தளத்தில் இருந்து இந்த ரொக்கெட் உள்ளூர் நேரப்படி கடந்த வியாழக்கிழமை இரவு 9.30 மணிக்கு விண்ணில் செலுத்தப்பட்டது.

உளவு செயற்கைக்கோள்களைச் செலுத்துவது, அவற்றைக் கண்காணிப்பது உள்ளிட்ட பணிகளைச் செய்து வரும் என்.ஆர்.ஓ உளவு அமைப்பின் இரகசிய செயற்கைக் கோளை இந்த ரொக்கெட் சுமந்து சென்றதாக வான்டன்பெர்க் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமையே இந்த ரொக்கெட் விண்ணில் செலுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதில் இருந்த திருத்தம் உரிய நேரத்தில் கண்டுபிடிக்கப்பட்டதால் இது தள்ளிவைக்கப்பட்டது.

திருத்தம் சரி செய்யப்பட்டு கடந்த வியாழக்கிழமை இரவில் விண்ணில் ஏவப்பட்டது.

செலுத்தப்பட்ட ரொக்கெட் மற்றும் செயற்கைக்கோள் பற்றி வேறு எந்தத் தகவலும் வெளியிடப்படவில்லை. செயற்கைக்கோளின் நோக்கம், அதன் விலை பற்றியும் தெரியவில்லை.




# ஆர்ப்பாட்டங்களை முடிவிற்கு கொண்டுவர எதிர்க் கட்சிகள் பேச்சுக்கு வரவேண்டும்

## ஏமன் ஜனாதிபதி அழைப்பு

(சனா)

அரபு நாடான ஏமனில் நடந்து வரும் ஆர்ப்பாட்டங்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான முயற்சியாக, பேச்சுவார்த்தைக்கு வரும்படி எதிர்க்கட்சிகளை அழைததுள்ளார், அந்நாட்டு ஜனாதிபதி அலிஅப்துல்லா சலே. ஆனால், மத அறிஞர்கள் மற்றும் பழங் குடியினத் தலைவர்கள், சலே உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

ஏமனில், கடந்த பெப்ரவரி மாதம் தொடங்கிய அரசுக்கு எதிரான போராட்டம் தொடர்ந்து நடந்து வருகிறது. ஜனாதிபதி சலே ஆதரவாளர்கள் மற்றும் எதிர்ப்பாளர்கள் இடையே மோதலும் நடக்கிறது. மனித உரிமை ஆர்வலர்கள், ஒத்துழையாமை போராட்டத்தில் குதிக்கும்படி மக்களுக்கு துண்டுப் பிரசுரங்கள் மூலம் அழைபபு விடுத்துள்ளனர். இந் நிலையில், ஜனாதிபதி சலே பதவி விலக இன்னும் இரண்டு வாரங்கள் அவகாசம் அளிப்பதாகவும், ஏமன் உள்நாட்டு விவகாரத்தில் சவுதி மற்றும் வளைகுடா நாடுகள் தலையிடக் கூடாது என் றும் எதிர்க்கட்சிகள் சமீபத்தில் அறிக்கை வெளியிட்டன.

தொடர்ந்து நேற்றுமுன்தினம் ஏமனில் உள்ள மத அறிஞர்கள் மற்றும் பழங்குடியினத் தலைவர்கள் வெளியிட்ட அறிக்கையில், அமைதியான முறையில் இளைஞர்கள் மற்றும் மக்கள் நடத்தும் போராட்டத்திற்கு செவிசாய்க்க வேண்டும். என்றுறும் ஜனாதிபதி உடனடியாகப் பதவி விலக வேண்டும். இராணுவம் மற்றும் பாதுகாப்புத் துறைகளில் பதவிகளில் உள்ள அவரது உறவினர்கள் பணிநீக்கம் செய்யப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

இதற்கிடையில், தலைநகர் சனாவில் தனது ஆதரவாளர் கள் மத்தியில் நேற்று பேசிய ஜனாதிபதி சலே, சட்டபூர்வமாக ஜனாதிபதி பதவியில் இருப்பதற்கு எனக்கு அதிகாரம் உண்டு. நாட்டில் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மை கருதி பேச்சுவார்த்தைக்கு வரும்படி எதிர்க்கட்சிகளை அழைக்கிறேன். அதன் மூலம் நாம் ஒரு ஒப்பந்தத்தை மேற்கொள்ள முடியும் என்று கூறியுள்ளார்.

# நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்குமாறு பாகிஸ்தான் இராணுவம் கோரிக்கை

(இஸ்லாமாபாத்)

இராணு வத்துக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்க வேண்டும் என பாதுகாப்பு அமைச்சகம் பாகிஸ்தான் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

நேற்றுமுன்தினம் அந்நாட்டு நாளிதழில் வெளியான செய்தியில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 2011-12 நிதியாண்டுக்கான இராணுவ நிதி ஒதுக்கீட்டில் இந்திய மதிப்பின்படி ரூ.58 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என இராணுவ அமைச்சகம் கோரியிருப்பதாக பிஸினஸ் ரிகார்டர் எனும் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.


கடந்த ஆண்டைக் காட்டிலும் இது 18 சதவீதம் கூடுதலாகும். 2010-2011 நிதியாண்டில் பாகிஸ்தான் தனது வரவு செலவுத் திட்டத்தில் இராணுவத்துக்கு ஒதுக்கிய தொகை இந்திய மதிப்பில் ஏறத்தாழ ரூ.45 ஆயிரம் கோடி மட்டுமே.

இதில் சுமார் ரூ.13 ஆயிரம் கோடி பாகிஸ்தானின் அணு ஆயுத மேம்பாட்டுக்கும், பாதுகாப்புக்காகவும் தேவைப்படுகிறது என அமைச்சகம் தெரிவித்துள்ளது குறிப்பிடத் தகுந்தது.

இராணுவத்தினருக்கான ஊதியத் தொகைக்காக செலவிட ரூ.20 ஆயிரம் கோடியும், கட்டுமானப் பணிகளுக்கு ரூ.4,500 கோடியும் தேவைப்படும் என இராணுவ அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பயங்கரவாதத்துக்கு எதிராக பாகிஸ்தான் எடுத்து வரும் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளது. இதன் காரணமாகத் தேவைப்படும் தளபாடங்களைப் பெறுவதற்கு இராணுவத்தினர் கூடுதல் தொகை செலவிட வேண்டியுள்ளது என்பதால் நிதி ஒதுக்கீட்டை உயர்த்திக் கேட்டிருப்பதாக இராணுவ விடயங்களைக் குறித்தான பாகிஸ்தான் நாடாளுமன்றக் குழுவின் உறுப்பினரான ்.பைசல் ஸலா ஹயாத் கூறினார்.

# சீனக் கடைகளில் தாய்ப்பால் விற்பனை



சீன வேளாண் பல்கலைக்கழகத்தில் உள்ள அக்ரோ உயிரி தொழில்நுட்ப பரிசோதனைக் கூடத்தின் முன்னணி ஆராய்ச்சியாளர் லீ நிங் மனிதனைப் போன்று மரபணு செய்யப்பட்ட பசுவை உருவாக்கியுள்ளார்.

அந்தப் பசுவின் பால் தாய்ப்பால் போன்றது. மற்றப் பசுகளின் பாலைவிட முற்றிலும் மாறுபட்டது. மரபணு மாற்றம் செய்யப்பட்ட பசுவின் பால் தாய்ப்பாலுக்கு நிகரான சத்துக்களைக் கொண்டது.


அதில் தாய்ப்பாலில் இருப்பது போன்று சக்திமிக்க லேக்டால்புமின், லேக்டோ பெரின், லைசோசும் மற்றும் புரோட்டீன் சத்துக்கள் நிறைந்தது.

மரபணு மாற்றம் செய்யப்பட்ட பசுக்களில் இருந்து பெறப்படும் தாய்ப்பால் இன்னும் 2 ஆண்டுகளில் சீன கடைகளில் விற்பனை செய்யப்படவுள்ளது.

அதற்கான சோதனை சீனாவில் உள்ள நோய்த் தடுப்பு மற்றும் பாதுகாப்பு மையத்தில் நடைபெற்றது. அதில் மரபணு மாற்றம் செய்யப்பட்ட பசுவின் பால் தாய்ப்பால் போன்று மிகவும் சத்தானது என நிரூபணமாகியுள்ளது.

## ஞாயிறு சிந்தனை

# இன்று குருத்து ஞாயிறு



எருசலேம் நோக்கி இயேசு பயணம் தொடங்கிய நேரம் முதல், எருசலேமில் நுழைந்த பொழுதும், அதன் பின அங்கு நிகழ்ந்த ஒவ்வொரு நிகழச்சியும் இதயததிற்கு இதமானது அல்ல. ஆனால், இலட்சிய வாழ்வு வாழும் எவருடைய வாழ்வும் இப்படித்தான் இருக்கும். கசப்பானதாக, கடினமானதாக ஆனாலும் ஒரு இனிய சுவை கொண்டதாக இருக்கும். முள்ளில் ரோஜாவாக இருக்கும். வெற்றியும் தோல்வியும் கலந்த ஒரு அனுபவம்.

குருத்துதோலை ஞாயிறும் இதையே நமக்கு உணர்த்துகிறது. தோல்வியில் நம்பிக்கையையும் வெற்றியில் நிதானத்தையும் சமன் செய்து வாழ உணர்த்துகிறது. அர்ப்பண வாழ்வில், இலட்சிய பயணத்தில் வேதனையும் விரக்தியும் விமர்சனமும் நம் வாழ்க்கையை விகாரப்படுத்தி விடலாம். குருத்து வெளிப்படுத்தும் இளமை, புதுமை, செழுமை இங்கு நம்பிக்கை உரம் ஊட்டும் என்பதாலே இயேசு இதை அனுமதிக்கிறார்.

உண்மைக்குச் சான்று பகரும் இயேசுவின் சாட்சிய வாழ்வில், தலைமையேற்று நடத்தும் இயேசுவின் பணி வாழ்வில், சொத்து சுகம், பொன் பொருள் அனைத்தையும் இழக்க வேண்டும் என்பதாலே, இன்று ஒரு கழுதை வாகனத்திற்குச் சம்மதிக்கிறார். அதே பணிவாழ்வில், மானம், மரியாதை களையப்படும் என்பதாலே, குருத்து ஞாயிறு பயணத்தில் மேலுடைகளை கழுதையின் மேலும், வழியிலும் விரிப்பதற்கு ஒப்புதல் வழங்கப்படுகிறது.

இந்தக் குருத்து ஞாயிறு தந்த உயிர்ப்பின் நம்பிக்கையில் பெரிய வெள்ளியைச் சந்திக்கும் வலிமையைப் பெற்றார். இந்த உயிர்ப்பின் நம்பிக்கையை நினைவூட்டும் குருத்து ஞாயிறைக் கொண்டாடும் நாம், வாழ்வின் பெரிய வெள்ளிகளை வலிமையோடு சந்திப்போம். புதுவாழ்வை இனிதே வாழ முயற்சிப்போம்..

யா. அலெக்சாண்டர்
மறையாசிரியர்.

# வடிவேலு, குஷ்பு பேசும் அளவிற்கு தமிழக நிலை மோசமடைந்துள்ளது

## ம.தி.மு.க. நாஞ்சில் சம்பத் கவலை




(திண்டுக்கல்)

தமிழக சட்டசபைத் தேர்தலில் வடிவேலு, குஷ்பு பேசும் அளவிற்கு நிலைமை மோசமாகியுள்ளதென ம.தி.மு.க வின் கொள்கை பரப்புச் செயலர் நாஞ்சில் சம்பத் தெரிவித்தார்.

திண்டுக்கல்லில் நடந்த பொதுக்கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

தி.மு.க.வால் அவமானப் படுத்தப்பட்ட எம்.ஜி.ஆர்., திண்டுக்கல்லில்தான் முதலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். தேர்தலில் போட்டியிட விடாமல் அவமானப்படுத்தப்பட்ட ம.தி.மு.க., முதல் கூட்டம் திண்டுக்கல்லில் நடக்கிறது.

இதனால் வரும் காலம் வைகோவின் காலமாக மாறப் போகிறது. ம.தி. மு.க ஒரு இயக்கமாக செயற்படுகிறது.

அ.தி.மு.க., தொண்டர்கள் மீது எங்களுக்குக் கோபம் இல்லை. துரோகத்தைச் செய்த ஜெயலலிதா மீதுதான் எங்களுக்குக் கோபம்.

அ.தி.மு.க.,விற்கு நாங்கள் உழைத்த உழைப்பிற்கு, சிந்திய வியர்வைக்கு எங்களுக்குக் கிடைத்த பரிசு இதுதானா. நாங்கள் தனித்து நின்றால், பணம் வாங்கி விட்டு தனித்து நிற்பதாக எங்கள் மீது பழி வரும். ஊடகங்கள் குறை கூறும்.

கூட்டணியில் இல்லாத விஜயகாந்துக்கு 41 சீற், கூட்டணியிலிருந்து 7 ஆண்டுகள் உழைத்தவர்களுக்கு 12 சீற்றா?.

தி.மு.க., மேடைகளில் ஈ.வே. ராமசாமி, அண்ணாத்துரை, சிட்டிபாபு, பட்டுக்கோட்டை அழகிரி, வைகோ பேசிய மேடையில், வடிவேலு, குஷ்பூ, ராதிகா, செந்தில், சிங்கமுத்து பேசும் அளவிற்கு நிலைமை மோசமாகியுள்ளது.


தி.மு.க.,வும், அ.தி.மு.க., வும் கொள்கை சொல்லி வாக்குக் கேட்கவில்லை. இலவசங்களைச் சொல்லி வாக்குக் கேட்கிறார்கள்.

ஜாதிகளை ஒழிப்போம் என்று கூறி விட்டு, ஜாதிக் கட்சிகளுடன் கூட்டணி வைத்துள்ளனர். நாங்கள் தேர்தலில் நிற்காததால் அ.தி. மு.க., தொண்டர்களிடம் அனுதாபம், தி.மு.க.,தொண்டர்களிடம் கௌரவம், பொது மக்களிடம் பரிவு கிடைத்துள்ளது.

ம.தி.மு.க., இல்லாததால், அ.தி.மு.க.வுக்கு ஆட்சி அமைக்க பெரும்பான்மை கிடைக்காது. துரோகம் செய்தவர்கள் அதற்கான துரோகத்தை அனுபவித்தே தீருவார்கள்.

மே.13 இன் பின்பு பல அ.தி. மு.க.,முன்னாள் அமைச்சர் கள் எங்கள் கட்சிக்கு வருவார்கள் என்று பேசினார்.

# சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நடிகர் ரஜனியின் வாக்களிப்பு



நடிகர் ரஜனிகாந்த் வாக்களித்த விவகாரம் குறித்து பரபரப்பாகப் பேசபபட்டது.


இந்த விவகாரம் குறித்து தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி பிரவீன்குமார் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில் -

சென்னையில் ஸ்டெலலா மாரீஸ் கல்லூரி வாக்குசசாவடியில் நடிகர் ரஜனிகாந்த் யாருக்கு வாக்களித்தார் என்பது தனியார் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டதாக புகார் கூறபபட்டது. அது தொடர்பாக அந்த வாக்குச்சாவடியில் நாங்கள் பதிவு செய்த வீடியோ காட்சிகளையும், தனியார் தொலைக்காட்சி ஒளிபரப்பையும் நாங்கள் பார்த்தோம். அவர் யாருக்கு வாக்குப் போட்டார் என்பது தெரியவில்லை.

அதுதொடர்பாக தேர்தல் பார்வையாளரும் புகார் கூறவில்லை. இருந்தாலும், அந்த வீடியோப் பதிவை தேர்தல் திணைக்களத்திற்கு அனுப்பியுள்ளோம்.

அங்கு மறுவாக்குப் பதிவு நடத்துவதா? வேண்டாமா? என்பது பற்றி தேர்தல் திணைக்களமே முடிவு செய்யும் என்று கூறினார்.

# பிணையில் விடுதலை



(புதுடெல்லி)

சத்தீஸ்கர் மாநிலத்தில் நக்சலைட் இயக்கத்துடன் தொடர்பு வைத்து இருந்ததாக சமூக சேவகர் டாக்டர் பினாயக் சென 2007 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார். அவர் மீது தேசத்துரோக குற்றச்சாட்டும் கூறப்பட்டது. இநத வழக்கில் சத்தீஸ்கர் நீதிமன்றம் அவருக்கு ஆயுள்தணடனை வழங்கியது. இதற்கு நாடு முழுவதும் எதிர்ப்புக் கிளம்பியது.

பினாயக் சென் பிணைகேட்டு உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்தார். அது தள்ளுபடி ஆனது. இதையடுத்து அவர உச்ச நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தார். இந்த மனு விசாரணை முடிந்து நேற்று நீதிபதிகள் தீர்ப்புக் கூறினார்கள்.

அவர்கள் பினாயக் சென்னை ஜாமீனில் விடுதலை செய்து உத்தரவிட்டனர். பினாயக் சென் தேசத்துரோகம் செய்ததற்கான ஆதாரங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனவே அவரைப் பிணையில் விடுதலை செய்கிறோம் என்று நீதிபதிகள் கூறினார்கள்.




## தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

ஒன்பதாவது அகவையில்



பெயர்: ச.செறோமி
நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்
14.04.2011.

ஐந்தாவது அகவையில்



பெயர்: செ.தனுசன்
முகவரி: இயற்றாலை, வரணி, யாழ்ப்பாணம்.
15.04.2011.

பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்


## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ....................................
முகவரி : ....................................
பிறந்த ஆண்டு : ....................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. .................................... பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# ஆச்சிரமத்திற்கு வருகிறார் சாயிபாபா



(நகரி)

ஆந்திர மாநிலம் புட்டபர்த்தியில் ஆசிரமம் அமைத்து ஆன்மீக பணியில் ஈடுபட்டு வருபவர் சத்யசாய்பாபா (85). இவர கடந்த மாதம் 18 ஆம் திகதி உடல்நலக்குறைவு காரணமாக அங்குள்ள சத்ய சாய் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். அவருக்கு இன்று 20 ஆவது நாளாக சிகிச்சை அளிக்கப் படுகிறது.

மூச்சுத்திணறல் இருப்பதால் தொடர்ந்து செயற்கைச் சுவாசம் அளிக்கப்படுகிறது. மருந்துகளை உடல் உறுப்புகள் ஏற்றுக் கொள்வதால் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இதுபற்றி ஆஸ்பத்திரி இயக்குநர் டாக்டர் சபயா கூறும போது, சாய்பாபாவின் உடல்நிலையைத் தொடர்ந்து கண்காணித்து வருகிறோம். அவரது சுவாசக் கோளாறைப் போக்குவதற்கான நோய் எதிர்ப்பு மருந்துகள் அளித்து வருகிறோம். இந்தக் கோளாறுப் குணமானால் செயற்கை சுவாசக் கருவியை அகற்றி விட லாம் என்றார்.

இந்த நிலையில் சத்ய சாய் பாபா அறக்கட்டளை நிர்வாகிகள் கூறும்போது, சாய்பாபாவை 2 வாரத்திற்குள் ஆசிரமத்திற்கு கொண்டு வருவோம். அவருக்கு அங்கேயே அவசர சிகிசசை பிரிவு ஒன்று அமைக்கப்படுகிறது. இதற்கான பணிகள் தொடங்கப்பட்டு விட்டன. ஆஸ்பத்திரியில் சாய்பாபா இருப்பதால் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

இதனால் மற்ற நோயாளிகள் பாதிக்கப்படுகிறார்கள். இதனால் பாபாவை ஆசிரமத்துக்கு கொண்டு வந்து சிகிச்சை அளிக்க முடிவு செய்துள்ளோம் என்றனர். சாய்பாபா விரைவில் நலம் பெற வேண்டி புட்டபர்த்தி ஆசிரமத்தில் தொடர் பஜனைகள் நடக்கிறது. ஆந்திரா முழுவதிலும் பல்வேறு இடங்களில் சிறப்பு யாகங்கள் நடக்கிறது.

# இலங்கை அகதி முகாம்கள் மீதான கண்காணிப்பில் வந்தது தளர்வு

(இராமநாதபுரம்)

வாக்குப்பதிவு முடிந்த நிலையில், அகதிகள் முகாம்கள் மீதான கண்காணிப்பில் தளர்வு செய்யப்பட்டுள்ளது.

சட்டசபைத். தேர்தல் திகதி அறிவிப்பைத் தொடர்ந்து அகதிகள் முகாம்கள் தீவிர கண் காணிப்பில் கொண்டு வரப்படடன. தலைவர்கள் பிரசார பயணம், அன்னிய ஊடுருவல், கள்ள வாக்குகள், ஆள்சேர்ப்பு போன்றவற்றை கருத்தில் கொண்டு முகாமின ஒவ்வொரு நடவடிக்கையும் கணகாணிக்கப்பட்டது.

வெளியில் வேலைக்குச் செல்லும் அகதிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டு, தினமும் மாலையில் எண்ணிககை சரிபார்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

ராகுலின் தமிழக பிரசாரத்தின் போது, அனைத்து பிரிவு பொலிஸாரின் கட்டுப்பாட்டில் அகதிகள் முகாம்கள் கொண்டு வரப்பட்டன.

தற்போது வாக்களிப்பு முடிந்த நிலையில், மறுநாளே அகதிகள் முகாமில் மேற்கொண்ட கண்காணிப்பு பணியில் தளர்வு செய்யப்பட்டது. வழக்கம் போல அங்குள்ள மக்கள் நடமாட அனுமதிக்கப்பட்டனர்.

இதனால் ஒரு மாதத்திற்கு பின் அகதிகள் முகாமில் இயல்பு வாழ்க்கை திரும்பி உள்ளது. இருந்தும் வாக்கு எண்ணிக்கையின் முந்தைய இரண்டு நாட்களுக்கு மீண்டும் கண்காணிப்பு பணி நடைபெற வாய்ப்புள்ளதாகத் தெரிகிறது.

## அனைத்துப் பீட கல்வி நடவடிக்கைகள் நாளையதினம் ஆரம்பமாகிறது

(கொழும்பு)

சப்ரகமுவ பல்கலைக்கழக அனைத்து பீடங்களின் கல்வி நடவடிக்கைகள் நாளைய தினம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் மஹிந்த எஸ். ரூபசிங்க தெரிவித்தார்.

மாணவர்கள் மற்றும் நிர்வாக அதிகாரிகளுக்கு இடையில் ஏற்பட்ட முறுகல் நிலையை அடுத்து பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

எனினும் பரீட்சைகள் வழமை போன்று இடம்பெற்றதென அவர் குறிப்பிட்டார்.

ஏப்ரல் மாதத்தின் முதல் வாரத்தில் முதலாம் வருட மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதன்படி நாளை தொடக்கம் ஏனைய அனைத்து பீட மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளும் வழமைக்குத் திரும்பவுள்ளதாக பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் தெரிவித்தார்.

## சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதாகத் தகவல்

(கொழும்பு)

கடந்த வருடத்தை விட இந்த வருடம் 34.1 சதவீதம் அதிகமான சுற்றுலாப்பயணிகள் வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வருடம் முதல் மூன்று மாதங்களில் மொத்தமாக 160,409 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்தனர்.

இது இந்த ஆண்டில் 215,124 பயணிகளாக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் அதிகமானோர் மேற்கு ஐரோப்பாவில் இருந்து வருகை தந்துள்ளனர்.

அத்துடன் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் தென்னாபிரிக்காவில் இருந்து வருகை தந்தோரின் எண்ணிக்கை 113.9 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

இதேவேளை, லத்தீன் அமெரிக்காவில் இருந்து 68.2வீதமும், அவுஸ்ரேலியாவில் இருந்து 35.7வீதமும், கிழக்காசியாவில் இருந்து 30.7 வீதமும், மத்திய கிழக்காசியாவில் இருந்து 28.7 சதவீத சுற்றுலாப் பயணிகளும் வருகை தந்துள்ளனர்.

இதேவேளை கடந்த ஆண்டில் மொத்தமாக 6 லட்சத்து 50 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ள நிலையில், அதனை இந்த வருடம் 8 லட்சமாக அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக சுற்றுலாத் துறை அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

## கணனி சேவைப்பிரிவு உதவி

(கொழும்பு)

விசாரணைகளை எளிதில் மேற்கொள்வதற்கு குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு உதவிகளை வழங்கவுள்ளதாக இலங்கை கணனி அவசர சேவைப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வுதவியினை வழங்க விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த சேவைப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

கணனி ரீதியிலான விசாரணைகளுக்கும் தொழில் நுட்ப ரீதியான விசாரணைகளுக்கும் குறித்த குழு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு உதவிகளை வழங்கும் என இலங்கை கணனி அவசரச் சேவைப் பிரிவு தெரிவித்துள்ளது.

இனிவரும் நாட்களில் விசேட குழுவானது குற்றப் புலனாய்வுத் துறையினருடன் சேர்ந்து விசாரணைகளை மேற்கொள்ளும் என இலங்கை கணனி அவசரச் சேவைப் பிரிவு தெரிவித்துள்ளது.

## அனைத்துலக சட்டங்களை மீறும்வகையில் இந்திய மீனவர்களின் ஊடுருவல் உள்ளது

### அமைச்சர் ராஜித குற்றச்சாட்டு

(கொழும்பு)

இந்திய மீனவர்கள் இலங்கையின் கடல் எல்லைக்குள் நுழைவது அனைத்துலக சட்டங்களை மீறுகின்ற செயல் என இலங்கையின் கடற்றொழில் நீரியல்வள அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இந்திய மீன்வர் சங்கப் பிரதிநிதிகளுடன் கொழும்பில் நடத்திய சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

பாக்கு நீரிணையில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் மிக மோசமாக அதிகரித்துள்ளன. இதனை இலங்கை மீனவர்களின் ஊடுருவலுடன் ஒப்பிட முடியாது.

இன்னொரு நாட்டின் கடல் எல்லைக்குள் நுழைவது அனைத்துலக சட்டங்களையும், ஐ.நா பிரகடனங்களையும் மீறுகின்ற செயலாகும்.

இந்திய மீனவர்கள் இலங்கையின் கடல் எல்லைக்குள் வந்து மீன்பிடிப்பது எமது நாட்டின் சட்டத்தையும், அனைத்துலக கடல்சார் பிரகடனங்களையும் மீறுகின்ற செயல்.



இலங்கையின் கடல் எல்லைக்கள் இந்திய மீனவர்கள் நுழைவது அதிகளவில் இடம்பெறுகிறது. இதை செய்மதிப் படங்கள் மூலம் உறுதி செய்ய முடிகிறது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

### ஏழுலட்சம் பெறுமதியான தங்கம் திருடிய இந்திய தொழில் நுட்பவியலாளர் கைது

(கொழும்பு)

ஏழு இலட்சம் ரூபா பெறுமதியான தங்கத்தைச் சட்டவிரோதமாக இலங்கையிலிருந்து கடத்திச் செல்ல முயன்ற இந்தியரொருவர் விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.


மொனராகலை பிரதேசத்தின் மருத்துவமனையொன்றில் மருத்துவத் தொழில்நுட்பவியலாளராகக் கடமையாற்றும் 28 வயதான இந்தியர் ஒருவரே அவ்வாறு சட்டவிரோதமாகத் தங்கத்தைக் கடத்திச் செல்ல முயன்றபோது கைது செய்யப்பட்டுள்ளார்.

தங்கமாலை, தங்க வளையல் என்பன மட்டுமன்றி தங்க பிஸ்கட்டுகளையும் அவர் சட்டவிரோதமாகக் கடத்திச் செல்ல முற்பட்டிருந்தார். அவற்றின் எடை நூற்றி ஐம்பது கிராம் எனவும், சந்தைப் பெறுமதி ஏழு இலட்சத்துப் பத்தாயிரம் அளவில் இருக்கும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட தங்கம் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதுடன், மேலதிக விசாரணைகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

## ராணுவ நீதிமன்றம் தொடர்பாக உச்ச நீதிமன்ற தீர்ப்பில் பிழையில்லை

### பிரதம நீதியரசர் அசோக டி.சில்வா தெரிவிப்பு



(கொழும்பு)

இராணுவ நீதிமன்றம் தொடர்பான உச்ச நீதிமன்றின் தீர்ப்பில் எவ்வித பிழையும் கிடையாது என பிரதம நீதியரசர் அசோக டி சில்வா தெரிவித்துள்ளார்.

இராணுவ நீதிமன்றை அரசியல் சாசனத்தின் அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நீதிமன்றமாக அண்மையில் உச்ச நீதிமன்றம் அறிவித்திருந்தது. உச்ச நீதிமன்றின் இந்தத் தீர்ப்பு பிழையானது எனவும், இதனை எதிர்ப்பதாகவும் சட்டத்தரணிகளும் எதிர்க்கட்சிகளும் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தீர்ப்பை மறுபரிசீலனை செய்யுமாறு கோரி கையொப்பங்கள் திரட்டப்பட்டிருந்தது. இராணுவ மற்றும் மேல் நீதிமன்றம் ஆகியவற்றினால் மட்டுமே இவ்வாறான வழக்குகளின் போது தண்டனை வழங்கப்பட முடியும் என பிரதம நீதியரசர் தெரிவித்துள்ளார்.

ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகாவின் பாராளுமன்ற உறுப்புரிமை ரத்து செய்யப்பட்டமையில் தவறில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அழுத்தம் காரணமாக தாம் பதவி விலக உத்தேசித்திருந்ததாக வெளியான தகவல்களில் உண்மையில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பதவி வகித்து வரும் இரண்டு ஆண்டுகளில் அரசியல் அழுத்தங்கள் எதுவும் பிரயோகிக்கப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இராணுவ நீதிமன்றின் தீர்ப்பை ரத்து செய்வதற்கு உச்ச நீதிமன்றம் உத்தேசித்திருந்ததாகவும் அரசியல் அழுத்தம் காரணமாக தீர்ப்பு மாற்றப்பட்டதாகவும் சில ஊடகங்களில் தகவல் வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## புதுவருட விபத்துக்களினால் 18பேர் உயிரிழப்பு; 600பேர் காயம்

(கொழும்பு)

தமிழ்-சிங்கள புத்தாண்டு காலப் பகுதியில் இடம் பெற்ற வெவ்வேறு விபத்துக்களின்போது 18 பேர் உயிரிழந்துள்ளதுடன் 600க்கும் மேற்பட்டோர் காய மடைந்திருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ் விபத்துக்களின் போது உயிரிழந்திருப்பவர்களில் நால்வர் 12 வயதுக்குக் குறைந்த சிறுவர்கள் என்றும், ஐவர் இளைஞர்கள் என்றும் ஏனையவர்கள் நடுத்தர மற்றும் முதுமை வயதை உடையவர்கள் என்றும் பொலிஸார் கூறினர்.

வாகன விபத்துக்கள், கத்திக்குத்து, நீர்நிலைகளில் நீராடியபோது ஏற்பட்ட விபத்து மற்றும் உமா ஓயாவின் நீர் மட்டம் திடீரென உயர்ந்ததால் ஏற்பட்ட விபத்து என்பன காரணமாகவே இந்த உயிரிழப்புக்கள் இடம்பெற்றிருப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

புத்தாண்டு காலத்தில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் ஒன்பது பேரும், நண்பர்கள் உறவினர்களோடு நீர்நிலைகளில் நீராடிய ஐவரும், உமா ஓயா நீர் மட்டம் திடீரென உயர்ந்ததால் காட்டுக்குச் சென்று விறகு சேகரித்துக் கொண்டு வீடு திரும்பிய மூன்று சிறுமிகளுமாக 18 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் அவர்கள் கூறினர்.

## 3000 வருடங்களுக்கு முந்திய கல்லறைகள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

மூவாயிரம் வருடங்களுக்கு முந்திய கல்லறைகள் ஹல்தும்முல்லைப் பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தொல்பொருள் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். ஹல்தும்முல்லையின் வேஎலிய பிரதேசத்தில் தொல்பொருளியல் ஆய்வாளர்கள் குழுவொன்று மேற்கொண்ட அகழ்வுப் பணிகளின் போதே குறித்த கல்லறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

களனிப் பல்கலைக்கழகத்தின் தொல்பொருளியல் துறைப்பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவே பிரஸ்தாப அகழ்வாராய்ச்சியை மேற்கொண்டிருந்தது. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய மூன்று கல்லறைகளையும், நினைவுத் தூபியையும் அவர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

குறித்த கல்லறைகள் தொடர்பான அகழ்வாராய்ச்சியை விரிவாக மேற்கொள்ளும் போது மலைநாட்டின் தென்பகுதிச் சரிவில் முற்காலத்தில் வளர்ச்சி அடைந்திருந்த ஒரு விசேட நாகரிகப் பரம்பல் குறித்த விடயங்களை அறிந்து கொள்ள முடியுமாக இருக்கும் என்று அவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

# மக்களின் காவலனாக, தீர்க்கதரிசனம்மிக்க தலைவராக அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா விளங்குகிறார்

## மத்திய கல்லூரி ஆசிரியர் நாக.தமிழிந்திரன்



(யாழ்ப்பாணம்)

மக்களின் காவலனாகவும் தீர்க்கதரிசனமிக்க தமிழ் மக்களின் தலைவராகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் விளங்குகின்றார் என யாழ்.மத்திய கல்லூரி ஆசிரியர் நாக. தமிழிந்திரன் தெரிவித்தார்.

ஊரெழு கணேசா வித்தியாசாலையின் 80ஆவது ஆண்டு நிறைவில் கணேசம் நூல் வெளியீடு, கணினி ஆய்வு கூடத் திறப்பு விழா நிகழ்வுகளில், நூலுக்கான வெளியீட்டுரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மக்களின் காவலனாகவும் மிகச் சிறந்த தீர்க்க தரிசனமிக்க தமிழ் தலைவராகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் விளங்கி வருகின்றார் என்பதுடன், மக்கள் பணிகளை சிறப்பாக முன்னெடுத்தும் வருகின்றார். இந்நிலையில் மாணவர்கள் பொதுமக்கள் என சகல தரப்பினருக்கும் அவரது சேவைகள் இன்றியமையாதவை என்றும் அவர் சுட்டிக் காட்டினார். யாழ் குடாநாட்டின் கல்வி நிலை தற்போது மிகவும் பின்தங்கியுள்ளது என்றும் இதற்கான அடிப்படைக் காரணம் மாணவர்களது வாசிப்புத் திறனும், கேட்டல் திறனும் குறைவடைந்தமையுமே காரணங்களாக கண்டறியப் பட்டுள்ளன. இந்நிலையில், மாணவர்களது எழுத்தாற்றல்கள் மற்றும் அவர்களது செயற்திறன் மிக்க செயற்பாடுகள் தொடர்ந்தும் நல்ல முறையில் வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

# சர்வதேச நாடாளுமன்றப் பிரதிநிதிகளின் ஒன்றுகூடல் திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு அனுமதி மறுப்பு

(கொழும்பு)

சர்வதேசப் நாடாளுமன்ற ஒன்றியத்தின் பிரதிநிதிகள் மகாநாட்டில் ஐ.தே.க.வின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு கதவடைப்புச் செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பனாமாவில் நேற்றுத் தொடக்கம் ஆரம்பமான சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியப் பிரதிநிதிகள் மாநாட்டில் இலங்கையின் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் அமைச்சர் நிமல் சிறிபால டீ சில்வாவின் தலைமையில் கலந்து கொண்டுள்ளனர்.

அதே நேரம் இந்நாட்களில் தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு பனாமாவுக்குச் சென்றிருக்கும் ஐ.தே.க. பொதுச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்கவையும் அதில் கலந்து கொள்ள வைப்பதற்கு ஐ.தே.க.வின் இன்னொரு பாராளுமன்ற உறுப்பினரான பேராசிரியர் ஜயலத் ஜயவர்த்தன முயற்சிகளை மேற்கொண்டிருந்தார்.

அதன் மூலம் அநியாயமாக சிறை வைக்கப்பட்டுள்ள சரத் பொன்சேகாவின் விடயம் குறித்து சர்வதேசப் நாடாளுமன்ற ஒன்றியத்தின் பிரதிநிதிகளுக்கு விளக்கமளிப்பது அவரது எதிர்பார்ப்பாக இருந்தது.

ஆயினும் அவர் அமர்வில் கலந்து கொள்வதற்கு அமைச்சர் நிமல் சிறிபால டீ சில்வா எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். அத்துடன் ஒன்றியத்தின் பொதுச் செயலாளரிடம் அவர் முறைப்பாடொன்றையும் மேற்கொண்டதன் காரணமாக பாதுகாப்பு அதிகாரிகள் உஷார்படுத்தப்பட்டு, திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு மாநாட்டு மண்டபத்தின் உள்ளே நுழையக் கூட அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

# திருட்டு முயற்சி ஒருவர் படுகாயம்

## விசுவமடுவில் திகில்

(யாழ்ப்பாணம்)

வீட்டினுள் நுழைந்து திருட முயற்சித்த ஐந்து திருடர்களைப் பிடிக்க முற்பட்டவேளை திருடர்களால் கடுமையாக தாக்கப்பட்டுள்ள நிலையில், ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை விசுவமடுவிலுள்ள இவரது வீட்டில் ஐந்து திருடர்கள் நுழைந்ததாகவும் அப்போது இவர்களை பிடிக்க முற்பட்ட இராசையா பிரபாகரன் (வயது-31) என்பவரை திருடர்கள் இரும்புக் கம்பியால் தாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டது.

தாக்கப்பட்டவர் சிகிச்சைக்காக கிளிநொச்சி ஆதார வைத்தியசாலையில் உடனடியாக சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக இவர் யாழ்.போதனா வைத்திய சாலைக்கு கொண்டு வரப்பட்டார்.

இதேவேளை, திருடுவதற்காக வந்து, இவரைத் தாக்கிய ஐந்து திருடர்களையும் முல்லைத்தீவுப் பொலிஸார் நேற்றுக் கைது செய்ததாகத் தெரிவிக்கப் படுகின்றது. (மி)

# அன்னதான உணவு உட்கொண்ட 56 பேர் வைத்தியசாலையில் அனுமதி

நோட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தியகல லொனெக் தோட்ட ஆலய உற்சவத்தில் அன்னதான உணவை உட்கொண்ட சுமார் 55 பேர் உணவு ஒத்துக்கொள்ளாமையால் வட்டவளை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்களில் சிலர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளதுடன், இவ்வாறு அனுமதிக்கப்பட்டவர்களில் 20 சிறுவர்களும் அடங்குவதாகவும் வட்டவளை வைத்தியசாலையின் பேச்சாளர் தெரிவித்தார்.

லொனெக் தோட்டத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆலய உற்சவத்தில் வழங்கப்பட்ட அன்னதான உணவை உட்கொண்டவர்களுக்கும், நீரைப் பருகியவர்களுக்கும் திடீரென்று வாந்தி, வயிற்றோட்டம், குமட்டல் என்பன ஏற்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

அன்னதான உணவு ஒத்துக் கொள்ளாமையால் வட்டவளை மாவட்ட வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவிலும் சிகிச்சை பெறுவதற்காக பலர் வந்து செல்வதாக வைத்தியசாலையின் பேச்சாளர் தெரிவித்தார். இந்தச்சம்பவம் தொடர்பில் ஆராயும் நடவடிக்கைகளில் பொதுசுகாதார உத்தியோகஸ்தர்கள் ஈடுபட்டுள்ளனர்.

# மியன்மார் மீனவர்களுக்கு திருகோணமலையில் சிகிச்சை

கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த நிலையில் இலங்கை மீனவர்களால் கடந்த 13 ஆம் திகதி மீட்கப்பட்ட 11 மியன்மார் மீனவர்கள் நேற்று கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கைக்கு சுமார் 300 கடல் மைல்கள் தொலைவில் உள்ள கடலில் வைத்தே மியன்மார் மீனவர்களைக் காப்பாற்றியதாக இலங்கை மீனவர் குழுவின் தலைவர் மெரில் பெர்னாண்டோ குறிப்பிட்டார்.

இலங்கை கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்ட மியன்மார் மீனவர்கள் 11 பேரும், திருகோணமலை கடற்படை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# சடலங்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று இருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று அதிகாலை நீர்வேலி சிறுபிட்டிப் பகுதியில் நான்கு பிள்ளைகளின் தந்தையான எம். கண்ணன் (வயது-44) என்பவர் தூக்கில் தொங்கி சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை, மதியம் 12.30 மணியளவில் யாழ்.தட்டாதெருப் பகுதியில் வசிப்பவரும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் 1ஆம் வருட முகாமைத்துவ மாணவராகிய தங்கராசா நிறைஞசன் (வயது-23) என்பவரும் தட்டாதெருவில் உள்ள தனது வீட்டில் யாரும் இல்லாத வேளையில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர்களுடைய சடலங்கள் பிரேத பரிசோதனைகளுக்காக நேற்றைய தினம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (மி)

# நிபுணர் குழுவின்...

பகுதியில் இருந்து முன்வைக்கப்பட்டு வந்துள்ளது.

புலிகளின் அரசியல்துறைத் தலைவர்கள் இலங்கைப் படையினரிடம் சரணடைய முயன்ற போது, கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டதாகவும் சுட்டிக்காட்டப்பட்டு வந்துள்ளது. இலங்கை அரசாங்கத்தின் கடும் எதிர்ப்புகளையும் மீறி, ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையில் இரு தரப்பாலும் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் போர் மீறல்கள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ள நிபுணர் குழு அமைக்கப்பட்டது. குற்றச்சாட்டுகள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட நிபுணர் குழு உறுப்பினர்கள் இலங்கைக்குச் செல்ல அனுமதிக்கப்படவில்லை. ஏனெனில் நிபுணர் குழுவின் பணிகளை எவ்வாறு முன்னெடுப்பது என்பது தொடர்பான இணக்கப்பாடு இலங்கை அரசாங்கத்துடன் எட்டப்படவில்லை.

ஐ.நா நிபுணர் குழுவின் அறிக்கை கடந்த வாரம் செவ்வாய்க் கிழமை ஐ.நா செயலாளர் நாயகத்திற்கும், இலங்கை அரசாங்கத்திற்கும் கையளிக்கப்பட்டது. ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூனால் அறிக்கை இதுவரை பகிரங்கப்படுத்தப்படவில்லை. இந்நிலையில் இவ்வறிக்கை நிச்சயம் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் என்று கூறுகின்றார் இலங்கைக்கான முன்னாள் சமாதானத் தூதுவரும் நோர்வே அரசாங்கத்தின் இன்றைய அனைத்துலக அபிவிருத்தி அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம்.

ஐ.நா நிபுணர் குழுவின் அறிக்கை இரகசியமாகப் பேணப்படுமாயின் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.அறிக்கை பகிரங்கப்படுத்தப்படுவதற்கு முன்னர் அது தொடர்பாக கருத்துரைப்பதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு ஐ.நா ஒரு வாய்ப்பினை வழங்கியுள்ளது.

பொருத்தமான நேரத்தில் உரிய முறையில் பான் கீ மூன் அதனைப் பகிரங்கப்படுத்துவார் என நான் அவர் மீது நம்பிக்கை கொண்டுள்ளேன் என சொல்ஹெய்ம் கூறியுள்ளார்.

# இராஜதந்திரிகளுடன்....

வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.


இதேவேளை, நிபுணர்கள் குழுவின் முழு அறிக்கையை யும் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் அடுத்த வாரம் வெளியிடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், இலங்கை அரசாங்கத்திற்கு கையளிக்கப்பட்டுள்ள நிபுணர்கள் குழுவின் அறிக்கையின் பிரதியின் ஒரு பகுதி உள்நாட்டு ஆங்கில பத்திரிகை ஒன்றில் பிரசுரிக்கப்பட்டுள்ளமைக்கு இலங்கை அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.நா.வுக்கு பதிலளிக்க....

தயார் செய்வார்கள் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.


நிபுணர் குழுவின் அறிக்கையின் பாரதூரம் காரணமாக இராஜதந்திர வழிகளில் மட்டுமே அதனை எதிர்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அலரி மாளிகைத் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, புலிகளின் ஆதரவாளர்கள் பரப்பிவரும் வதந்திகளை ஆதாரமாகக் கொண்டே ஐ.நா.நிபுணர் குழு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக சிரேஷ்ட அமைச்சரான திஸ்ஸ வித்தாரண தெரிவித்துள்ளார். யுத்தக் குற்றம் புரிந்ததாகக் கூறி சர்வதேச நீதிமன்றிற்கு இலங்கையை அழைத்துச் செல்வதே ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையின் நோக்கமெனவும் அமைச்சர் குற்றம் சுமத்தியுள்ளார்.



# இணக்க அரசியல் மூலமே நிரந்தர தீர்வைப்பெற முடியும்

## பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் தெரிவிப்பு



இணக்க அரசியல் மூலமே எமது மக்களுக்கு நிரந்தர தீர்வை பெற்றுக்கொள்ள முடியும் என்பதில் இறுதிவரை உறுதியாக இருந்தவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களே என பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற கோப்பாய் தெற்குப் பகுதி மக்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். யுத்தத்தால் ஒருபோதும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வினை பெற்றுவிட முடியாது என்பதிலும் இணக்க அரசியல் மூலமே நிரந்தரத் தீர்வினைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதிலும் அமைச்சர் அவர்கள் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளார்.

ஆயுதப்போராட்ட காலந் தொட்டு இன்றுவரை எமது மக்களுக்கான நிரந்தரத்தீர்வு விடயத்தில் அமைச்சர் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றார். எனவே கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை சாதகமாக்கி வளமான எதிர்கால வாழ்வை உறுதிப்படுத்த வேண்டியது எங்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

# ஐ.நா. அறிக்கை கோமாளித்தனமானது

## தேசப்பற்றுள்ள இயக்கம் சீற்றம்

இலங்கைக்கு எதிரான சர்வதேச நாடுகளின் போர்க் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் பொய்யானவை, அமெரிக்கா மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் நடவடிக்கைகளுக்கு எதிராக இவ்வாரத்தில் தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்படும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

நாட்டின் சுயாதீனத் தன்மைக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையில் எந்தவொரு சர்வதேச நாடும் ஊடுருவ இடமளிக்க முடியாது.

பான் கீ மூனின் அறிக்கை வேடிக்கையானதும் கோமாளித் தனத்தின் உச்சகட்டமாகும் என்றும் அந்த இயக்கம் குறிப்பிட்டுள்ளது

# நிபுணர் குழு அறிக்கைக்கு எதிர்ப்பு பொன்சேகாவை விடுதலை செய்யாதது ஏன்?

## அரசு மீது எதிர்க்கட்சிகள் பாய்ச்சல்

ஐ.நா. நிபுணர்குழு அறிக்கைக்கு எதிர்ப்பை வெளிக்காட்ட வேண்டுமாயின் சிறையிலிருந்து சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு எதிர்க்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிர்ப்பை வெளிக்காட்ட வேண்டுமாயின் அதனை நியாயப்படுத்தும் வகையில் சிறை வைக்கப்பட்டுள்ள சரத் பொன்சேகாவை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு எதிர்க் கட்சியின் முக்கிய எம்.பி.க்கள் பலர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். அத்துடன் ஜனநாயகத்தைப் பாதுகாத்தல் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான சில ஆலோசனைகளையும் அவர்கள் தங்களது நிபந்தனைகளாக முன்வைத்துள்ளனர்.



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சிப் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கை தொடர்பில் இதுவரை பதில் எதுவும் அளிக்காத போதிலும், பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவோ சரத் பொன்சேகாவை விடுதலை செய்யும் விடயத்தில் எந்தவித அழுத்தங்களுக்கும் அடிபணியத் தயாராக இல்லையென்ற கடும் நிலைப்பாட்டில் இருப்பதாகதகவல்கள் வெளியாகியுள்ளன.

# நிபுணர் குழுவின் அறிக்கை; பொறுமைகாக்கிறது ஐ.தே.க.

ஐ.நா செயலாளர் நாயகம் பான் - கீ - மூனின் நிபுணர்கள் குழுவின் அறிக்கை தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி கொள்கை ரீதியான தீர்மானத்தை எடுக்கும் வரை அது குறித்து ஊடகங்களுக்கு கருத்து எதனையும் வெளியிட வேண்டாம் என அந்த கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய, கட்சியின் உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அறிக்கை இதுவரை பகிரங்கப்படுத்தப்படாததாலும், அது குறித்து அரசாங்கம் உத்தியோபூர்வமான அறிக்கை எதனையும் வெளியிடாத நிலையிலும் அவசரமாக அறிக்கைகளை வெளியிடும் தேவையில்லை என கரு ஜயசூரிய சுட்டிக்காட்டியுள்ளார்.

வெளிநாடு சென்றிருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் உத்தரவின் பேரில் அவர், இதனை தெரியப்படுத்தியுள்ளார். இதற்கு கட்சியின் மற்றுமொரு பிரதித் தலைவரான சஜித் பிரேமதாஸவும் இணக்கம் வெளியிட்டுள்ளார். இந்த நிலையில் நிபுணர்கள் குழுவின் அறிக்கை தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் பதில் தலைவர், கட்சியின் சிரேஸ்ட தலைவர்களை எதிர்வரும் 19 ஆம் திகதி அழைத்து கலந்துரையாடவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# காணி ஆவணங்கள் கிடைக்குமா? முல்லை.பொதுமக்கள் ஆதங்கம்

(முரசுமோட்டை)

முல்லைத்தீவு, பாலிநகர். ஒரு ஏக்கர் திட்டத்தில் மீள்குடியேறி வசித்துவருகின்ற 52 குடும்பங்கள் தங்களுக்கான காணிக்குரிய ஆவணங்கள் இதுவரை வழங்கப்படாமையால் தங்களுக்கான வாழ்வாதாரத் திட்டங்களையும் வீட்டுத்திட்டத்தையும் பெறமுடியாது உள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

1990 இன் பின்னர் ஏற்பட்ட அசாதரண சூழலினால் பல்வேறு இடங்களிலிருந்தும் இடம்பெயர்ந்து மற்றும் காணிகள் அற்ற குடும்பங்கள் என 52 குடும்பங்களுக்கு மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் ஏற்பாட்டில் காணிப்பிரிவினரும் கிராம அலுவலரும் இணைந்து 1996 ஆம் ஆண்டு பாலிநகர் கிராமத்தில் ஒரு ஏக்கர் வீதம் காணிகள் வழங்கப்பட்டன.

எனினும் காணிகளுக்கான சட்ட ஆவணங்கள் எவையும் இதுவரை தங்களுக்கு வழங்கப்படவில்லை எனவும், தாங்கள் மீளக்குடியேறி 18 மாதங்கள் தாண்டிய நிலையில், தாங்கள் நிரந்தர வீடுகளையோ தற்காலிக வீடுகளையோ பெற்றுக்கொள்ள முடியாதநிலை காணப்படுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, அரச அதிகாரிகள் தங்கள் காணிக்குரிய ஆவணங்களை வழங்குவதன் மூலமே தாங்கள் இந்த உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து, ஆவணங்களைப் பெற்றுத்தருமாறு அம்மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (110)

## ஏட்டிக்குப் போட்டியாக...

ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இராணுவப் படையினர் வன்னி நோக்கி முன்நகர்ந்த போது எறிகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகவும் இதில் பொது மக்கள் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகள் அப்பாவி பொதுமக்களை மனித கேடயமாகப் பயன்படுத்திக் கொண்டதாக மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இறுதிக்கட்ட யுத்தத் தின் போது அதிகளவான பொது மக்கள் எறிகணைத் தாக்கு தல்களின் மூலம் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இறுதிக்கட்ட யுத்தத்தின் போது கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் உரிய விதத்தில் நடத்தப்படவில்லை எனவும் அவர்களது உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

சில கைதிகளுக்கு எதிராக சித்திரவதைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இராணுவத்தினரின் முன்நகர் வுகளை கட்டுப்படுத்துவதற்கு புலிகள் அப்பாவி பொதுமக்களைப் பயன்படுத்திக்கொண்டதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது சிறுவர்கள் முதல் சகல வயதினையுடையவர்களையும் புலிகள் படையில் இணைத்துக் கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. யுத்த வலயத்திலிருந்து தப்பிச் செல்ல முனைப்பு காட்டிய அப்பாவிப் பொதுமக்கள் மீது புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுமக்களை மனித கேடயமாக பயன்படுத்தியமை, புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து தப்பிச்செல்லும் பொது மக்களை கொலை செய்தமை, பொது மக்கள் நிலைகளுக்கு அருகாமையில் ஆயுதங்களைப் பயன்படுத்தியமை, பலவந்தமாக சிறுவர்கள் உள்ளிட்டவர்களை படையில் இணைத்துக் கொண்டமை, பலவந்தமாக ஊழியர்களை கடமையில் ஈடுபடுத்தியமை? தற்கொலைத் தாக்குதல்கள் மூலம் பொதுமக்களை படுகொலை செய்தமை, உள்ளிட்ட ஆறு பிரதான குற்றச் செயல்களை புலிகள் மேற்கொண்டதாக ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள் குழு அறிவித்துள்ளது. குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. சர்வதேச மனித உரிமைச் சட்டங்களுக்கு அமைவான முறையில் விசாரணை நடத்தப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

குற்றச் செயல்கள் தொடர்பில் உள்நாட்டு ரீதியான விசாரணை நடத்தப்பட்டால் அது சர்வதேச தர நிர்ணயங்களுக்கு அமைவாக இருக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. சர்வதேச மனித உரிமைச் சட்டங்களுக்கு அமைவான முறையில் விசாரணை நடத்தப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. குற்றச் செயல்கள் தொடர்பில் உள்நாட்டு ரீதியான விசாரணை நடத்தப்பட்டால் அது சர்வதேச தர நிர்ணயங்களுக்கு அமைவாக இருக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

நிபுணர் குழுவின் அறிக்கையில் அரசின் மீது 5 குற்றச் சாடடுக் களையும், புலிகளின் மீது 6 குற்றச்சாட்டுக்களையும் சுமத்தியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பான ஐ.நா.நிபுணர்குழுவின் அறிக்கை நாளை பகிரங்கப்படுத்தப்படவுள்ளதாக நியூயோர்கிலிருந்து பிந்திக் கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ மூன் தன்னிடம் கையளிக்கப்பட்டுள்ள நிபுணர் குழுவின் அறிக்கையின் ஒரு பிரதியை இலங்கை அரசாங்கத்துக்கும் வழங்கியிருந்தார். அதன் சில பகுதிகள் இன்றைய த ஐலண்ட் பத்திரிகையில் வெளியாகியுள்ளன.

இதற்கிடையே ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை ஊடகங்களுக்குக் கசிய விடப்பட்டுள்ளமை குறித்து ஐ.நா. செயலாளர் நாயகம் கடும் அதிருப்தி கொண்டுள்ளார். இலங் கையில் இடம்பெற்ற போர்க்குற் றங்கள் தொடர்பான அறிக்கைக்கு அளவுக்கதிகமான பிரபலம் கிடைத்துள்ளது.

## அரசியல் உரிமையை....

அரசியல் தீர்வு குறித்து அரசு தம்முடன் மட்டும்தான் பேச்சுக்களை நடாத்த வேண்டும் என்று புலிகள் முன்னர் கூறிவந்தனர்.

அதேபோன்ற அரசியல் பாதையில் தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பயணிக்கிறதா என்று கொழும்பில் உள்ள இராஜ தந்திரிகள் பலர் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அதேவேளை, அரசுடனான அரசியல் உரிமைப் பிரச்சினை தொடர்பான பேச்சுக்கள் குறித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சிரேஷ்ட தலைவர்களுக் கிடையில் வெவ்வேறான கருத்துக்கள் நிலவி வருவதாகவம், இதனாலேயே அரசியல் தீர்வு குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திட்டவட்டமான தீர்வுத் திட்டம் ஒன்றை அரசின் பரிசீலனைக்கு முன்வைக்க முடியாமல் உள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## குற்றச் செயல்கள்....

சுவாசப் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாகவும் அக்கைதிகள் தெரிவித்தனர். இந்த கைதி களின் நிலைமைகள் தொடர்பாக கைதிகளின் உறவினர்களினால் யாழ்.சிறைச்சாலை அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்டுகின்றது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஏப்ரல் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.